[illegible]

V7, No. 1. 4.1.1934

ஜ
M211, N28KN
N34.7.1
199151

ஜனவரி KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 7.] 1934 ஆ ஜனவரி மீ 4உ [No. 1

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 1
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 3
3. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(ஸ்வாமிகி ஸரி)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 5
4. தமிழ்வேதக் கடலமுதம்
உபயவேதாந்த வித்வான் பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் 7
5. ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித்திரட்டு
(ஜான் அரசன்) T. S. நடராஜப்பிள்ளை B.A.B.L. 9
6. அப்பர் (64 கலை - இதிகாசம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 10
7. சூளாமணி (கதைச் சுருக்கம்)—வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.B.L. 10
8. கம்பராமாயணம்—(கிஷ்கிந்தாகாண்டம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 11
9. இன்பமும் துன்பமும்
K. S. இராமசுவாமி சாஸ்திரியார் B.A.B.L. 13
10. மதுரைக் கோவை
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 14
11. வர்த்தமானம் 16

கலாநிலயம்

சர்க்கரையும் சந்திரனும்.

இறைவனது திருவருளை முன்னிட்டு இவ்விதழோடு நம் கலாநிலயத்தின் ஏழாவது ஆண்டு துவக்கலாகின்றது. இந்தச் சமயத்தில், நமது கலாநிலயத்தின் நோக்கத்தைப்பற்றியும், அந்நோக்கத்தை இது நிறைவேற்றும்பொருட்டுச் செய்துவருகின்ற முயற்சிகளைப் பற்றியும், இந்த நோக்கம் நல்லதே என்று நம்புகின்றவர்கள் எவ்வகையில் தாமும் அதனைப் பரவச்செய்யலாம் என்பது பற்றியும், சிறிதிங்கு விளக்கிச் சொல்ல விரும்புகின்றோம். எமது நண்பர் அனைவரும் இவைகளைத் தம்நினைவில் வைத்துக்கொண்டு இப்பத்திரிகையின் தகுதியையும் பயனையும் மதிக்கநேர்வது நலம்.

இக்கலாநிலயத்தின் நோக்கம் அல்லது கொள்கை என்ன, என்ற கேள்விக்கு எளிதில் பதிற்சொல்ல முடிவதில்லை; ஏனெனில் இப்பொழுது பத்திரிகைகளிலும் பிரசங்கமேடைகளிலும் வழங்குகின்ற, 'முன்னேற்றம்', 'சீர்திருத்தம்', 'விடுதலை', 'சமய வளர்ச்சி' 'தொண்டு' முதலிய வாய்பாடுகள் ஒன்றும் இதற்குப் பொருந்தாதென்பதை இவ் வாறுவருடங்களாக நாம் எழுதிவந்த பல தலையங்கங்களைப் படித்திருப்பவர் நன்கு அறிவார். இந்நாள் மனிதர் மறந்திருக்கும் ஆன்மாவுடன் வாழ்க்கையை உறவுசெய்துவைக்கவேண்டுமென்பது இக்கலாநிலயத்தின் நோக்கம் என்று ஒருவாறு கூறலாம். எனினும் அவ்வான்மா உண்மையோ, அதன் இலக்கணம் என்ன, என்பது போன்ற தத்துவ விசாரணைகளில் இறங்குவதில்லை. முதலாளியாகஇருந்து அதிகாரம் செலுத்துவோரும் தொழிலாளியாக உழைத்து அயர்வோரும், செலவழித்துமாளாத செல்வமுண்டயோரும் தீராத கடன்பட்டுத் தவிக்கின்ற வறியோரும், மனிதர் என்று இருப்போர் எல்லோரும் எங்கும் ஒன்றிற்கு அல்லாக்கால் ஒன்றிற்கு மனம் நொந்துநொந்து வாடுகின்ற வாழ்க்கையினராய்த் தம் நாட்களைக் கடத்துவதற்கெல்லாம் காரணம் ஒன்றே—அதுதான் ஆன்மநினைவிற்குத் தம்மை ஆளாக்கிக்கொள்ளாமையாம். சிற்சிலர் சிலபோது சிரித்து மகிழ்வார்போல் காணப்படுகின்றாரே என்றால் அது பெரும்பாலும் மனத்தின் அழுகையை மறைப்பதற்குச் செய்கின்ற ஒரு உபாயமேயன்றி வேறன்று. ஆன்மாவை இழந்த மனது அழாமல் என்ன செய்யும். ஆயினும், இழந்த ஆன்மாவை மீண்டும் பெறுவதற்கேதான் அழுகின்றதென்ற இரகசியத்தை மனிதர் மனங்கள் அறிந்துகொள்ளாமல், வேறு வேறு குறைகள் பலப்பல இருப்பதாக எண்ணி அக்குறை நீங்கி நிறையவேண்டுமென்று வீணே குழம்புகின்றது. நிறைக்க வேண்டியது, மறதியால் இழந்திருக்கும் அவ்வான்மாவேயாதலால், அதனைக் கொணர்ந்து சேர்க்காமல், வேறு எதனைத்தான் கொணர்ந்து கொணர்ந்து போட்டாலும் மனிதமனம் குறைநீங்கி நிறைவடைய இயலாது. ஒளி இல்லாமையே இருள் என்று சூழ்கின்றதேயன்றி இருள் எனத் தனியாக ஒரு பொருள் இல்லை. இருள் நீங்க வேண்டுமானால் வெளிச்சத்தைக் கொண்டுவர வேண்டுமேயன்றி அவ்விருளைப் போக்குவதற்கு வேறு வழியில்லையே இருளை அடித்துத் துரத்த முடியாது; இலஞ்சங் கொடுத்து விலக்க முடியாது, பொருள்களைப் போட்டுத் தூர்க்க முடியாது. ஏனெனில், எங்கிருந்தோ வருவது போலவும் எவ்விடத்திற்கோ போவது போலவும் தோன்றினாலும் உண்மையில் இருள் என்ற ஒரு தனிப்பொருள் இல்லையன்றோ. ஒளி இல்லாமையே இருள்நிலை

என ஆவதால், ஒளியைக் கொணராமல் வேறு வகையில் அவ்விருளைப் போக்க முயல்வதெல்லாம் பயனற்ற பேதைமை என்பதை அறியாதார் இல்லை.

மனிதரை அல்லல் படுத்துவது அவரவர் மனத்தின்கண் இருக்கின்ற குறைகளே. கூழுக்கு உப்பு இல்லை என்பவர்முதல் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பவர் வரையில், காலுக்குச் செருப்பில்லை என்பார் முதல் தலைக்குக் கிரீடம் இல்லை என்பவர் வரையில் இடையே இருந்து வருத்துகின்ற குறைகளின் வகைகளும் அளவும் பலப்பலவாயினும் இக்குறைகளின் தொகுதியே மனிதருடைய மனத்தின்கண் இருள் போலநின்று மருட்டுகின்றது. மண்ணும் பொன்னும் பெண்ணும் எத்தனை எத்தனைதான் கொணர்ந்து கொட்டினாலும், ஆன்மா இன்மையால் விளைந்த அம்மனஇருள் நீங்குவது எங்ஙனம். ஓர் இருட்டறையில் பொருள்கள் அதிகமாகச்சேரச்சேர அத்தனைக்கு அத்தனை அதனில் நடமாடுகின்றவன் அதிகம் இடறிவிழுந்து துன்பப்படுகின்றான். அப்படியே, மனஇருள் நீங்காத மனிதனுக்குச் செல்வம் செல்வாக்கு முதலியவைகளால் துன்பமே மிகுகின்றது. மன இருள் அகலாத ஏழைகளும் இருக்கின்றனர்; பணக்காரர்களும் இருக்கின்றனர்; இவ்விருவர்களில் ஏழைகளுக்கே துன்பம் குறைவு. அவர் இடறி விழக்கூடிய பொருள்களும் குறைவாக இருத்தலே இதற்குக் காரணம் ஆகும். இருள்சூழ்ந்த அறையில் இருக்கின்ற பொருள்கள் எல்லாம் பயனற்றவைகளும் இடர்செய்வதற்கே காரணமும் ஆவதுபோலவே, அவ்விருட்டறையில் நடமாடுகின்றவர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் முட்டிக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்வது போலவே, ஆன்மஒளி யில்லாத வாழ்க்கையில் உழல்கின்ற மனிதர் சண்டையும் கூச்சலும் வலியும் வருத்தமும் பிடித்தலைக்க எத்திசை திரும்பினாலும் தீராத துன்பத்திற்கே ஆளாகி, அதனால் தாமும் வருந்தி மற்றவர்களையும் வருத்துவதன்றி வேறொன்றற்கும் தகுதியற்றவர்களாகிக் கிடக்கின்றனர்

மனக்குறைகள் வேறுவேறு பேர்கள் பெற்றாலும், மனிதர் படும் துன்பங்கள் வேறு வேறு தோற்றங்களைக் காட்டினாலும், அந்தத்தில் இவை அனைத்தும் ஆன்மநினைவு இல்லாமை ஒன்றையே குறிக்கும். பசியும் தாகமும் துன்பம் செய்கின்றன. எனினும், இவைகள் நோயுமில்லை, இந்நோய்க்கு வேறோர் மருந்துமில்லை. உடலின் சுகநிலைக்கு அவசியமான உணவும் நீரும் வேண்டும் வேண்டும் என்னும் அந்த ஆவலே, பசியென்றும் தாகமென்றும் வருத்தம்செய்து தூண்டுகின்றது. இதனை உணராமல் வைத்தியங்கள் செய்து பெருவிலை மருந்துகளை உட்கொள்வதால் பயனில்லை. வயிற்றுப்பசிக்கு உணவு ஆவதுபோல், வாழ்க்கைக்கு ஆதாரமாகிய மனத்தின் பசி, பற்பல குறைகளென்னும் துன்பங்களை விளைத்து ஆன்மாவை வேண்டுகின்றதுஎன்பதை மனிதர் எவ்வளவு விரைவில் உணர்ந்துகொள்கின்றோ அவ்வளவிற்கவ்வளவு நன்மையாம். இது பெரும்பாலும் அறியாததொன்றுமன்று. மெய்யாய நன்மையுடையவைகளைக்காட்டிலும் மனிதர் எளிதில் மறப்பது வேறொன்றுமில்லை. இம்மறதியை மாற்றி அவ்வப்போது ஆன்மநினைவைமனிதரிடையே விளைவிக்கவேண்டும் என்னும் முயற்சியை மேற்கொண்டிருப்பது இக் கலாநிலயம். ஆன்மநினைவு எழுவதற்கும் எழுந்த அந்நினைவு அழியாமல் நிலைப்பதற்கும் வழிசெய்துகொண்டால், பிறகு குறையில்லை, துன்பமும் இல்லை, வருந்துவதும் இல்லை, பிறரை வருத்துவது அதனினும் இல்லை.

மனிதர் இக்காலம் வாழும்வகைதெரியாமல்உழல்கின்றார்களாயினும், நிறைந்த வாழ்வு வாழவேண்டும் என்று படுகின்ற ஓர் ஆசையின் உருவமே ஆன்மா என்னக் கூறலாம். ஆசை என்று அல்லல் படுத்துகின்ற அதுதான், சிறிது சிற்பம் செய்யப்பெற்றால், மெல்ல மெல்ல ஆன்மாவாகத்திரள்கின்றது. ஒருவர் மனத்திலும் ஒருவரும் ஆன்மநினைவை வலிந்து புகுத்துதல் இயலாது. ஆன்மஅறிவினை விளக்குகின்ற தத்துவ நூல்களுக்கு என்றும் எங்கும் குறைவில்லை; ஆசிரியர்களும் பலர் உளர். மனித வாழ்க்கையோ எல்லாத் திசைகளிலும் நாளுக்குநாள் அதனின்றுவெகுதூரம் விலகிக்கொண்டு போவதையே காண்கின்றோம். தெய்வம் மதம் தர்மம் அன்பு, முதலியவைகளைப்பற்றிச் செய்யப்படுகின்ற "பிரசாரங்களின்" பயனும் இன்னதே ஏனெனில், ஆன்ம உணர்வு, கடவுள் பக்தி, நல்லொழுக்கும், அன்புடைமை, தருமசிந்தனை முதலியவைகள், வெளியிலிருந்து உள்ளே புகுத்தக் கூடியவைகள் அல்ல ; உள்ளத்திலே உதித்து வெளியில் பரவ வேண்டியவைகள். ஆன்ம வாழ்க்கையில் ஆழ்ந்திருக்கின்ற நல்லவர்களிடம் இந்த மேன்மைகள் விளங்குகின்றன, உண்மையே. எனினும், இன்னவைகளைத் தனித்தனி எடுத்துப் புகட்டுவதால் மாத்திரம் ஒருவரும் அதனை ஏற்றுக்கொண்டு நல்லவர்களாகிவிடமாட்டார். நல்வாழ்க்கையின் அடையாளங்களே இவை; மற்று, இவைதாம் தனித்தனி நல்வாழ்க்கை ஆகமாட்டா. நல்லவன் பொய்சொல்லமாட்டான் என்பது நிச்சயம்; மற்று, பொய் சொல்லாதவர்கள் எல்லாரும் நல்லவர் என்பதுவோ அவ்வளவுநிச்சயமன்று. இப்படியே மேற்கூறிய ஒவ்வொன்றையும் நாம் சோதித்து அறிந்துகொள்ளலாம்.

உள்ளத்தினின்று எழுகின்ற வோர் கிளர்ச்சியே சீரிய வாழ்க்கையாகப் பெருகுகின்றது என்பதைக் காட்டினோம். இனி, இக்கிளர்ச்சியின் தன்மை என்னவென்று சிறிது சிந்திக்கவேண்டும். ஆன்ம உணர்வை ஆதாரமாகக்கொண்டிருக்கின்ற நல்ல வாழ்விற்கும், ஆன்மஆதாரமற்ற பொல்லாத வாழ்க்கைக்கும், இவ்விரண்டிற்கும், அடிப்படையாக இருப்பது ஆசையே எனினும், அவ் வாசையின் தன்மைக்கு ஏற்றபடி வாழ்க்கையானது நல்லதாகவும்பொல்லாததாகவும் அமைகின்றது. தன்னையே கருதித் தனக்கு அதனால் பயன் உண்டு என்கின்ற நோக்கமுடன் ஒரு பொருளிற்கு ஆசைப்படுவது ஒருவகை. தன்னோடு தொடர்புகொள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லாமலே, ஒரு பொருளிற்கு, அப்பொருளின் பொருட்டே ஆசைப்படுவது மறுவகை. இவ் இருவகைகளில், முன்னைய ஆசை இருளிற்கு இழுத்துச்செல்லும் பேயை ஒக்கும்; பின்னையது, ஒளிசெய்து உயிர்களை உய்விக்கும் கதிரவன் போன்றது. ஒரு குழந்தை சர்க்கரையையும் காண்கின்றது, சந்திரனையுங் காண்கின்றது; அந்த இரண்டிற்கும் ஆசையும் படுகின்றது. எனினும், இந்த இரண்டு ஆசைகளுக்கும் இடையே இருக்கின்ற வேற்றுமை மிகப் பெரியது. தன்னுடைய வாயில் போட்டால் தனக்கு அது தித்திப்பை உண்டாக்கும் என்ன அதனைத் தனக்கு [illegible] ளவேண்டும் என்னும் எண் [illegible] சர்க்கரை

199151

யின்பால் வைக்கின்ற ஆசை. சந்திரனிடத்தில் வைக்கின்ற ஆசை அத்தகையதன்று. அச் சந்திரனைத் தன் உடைமை ஆக்கிக்கொண்டு அதனால் உண்டாகின்ற ஒரு பயனைக் கருதி ஒருவரும் சந்திரனிடத்தில் ஆசை வைப்பதில்லை. சந்திரனைக் காண்கின்ற ஆசையானது அச்சந்திரன்பொருட்டேயன்றித்தன்பொருட்டு அன்று. இப்படித் தன்னைச் சாராதீ ஆசையிற் பழகப்பழகத் தன்னைச்சார்ந்து அலைக்கின்ற ஆசைகள் எல்லாம் பற்றறுந்து அகன்ற இடம்தெரியாமல் ஓடிவிடும். சர்க்கரையில் வைத்திருந்த ஆசையைச் சந்திரனில் வைக்கக்கூடியஆசையாகமாற்றிவிடவழிகாண்போமாயின், அப்பொழுதே ஆன்ம ஒளியால் திகழ்கின்ற நல்வாழ்வை எய்தினவர்களாவோம். அற்பமான அந்தச்சர்க்கரையாசை மேன்மைவாய்ந்த இந்தச்சந்திரனாசையாக மாறவல்ல வழிகளை அமைத்துத்தருவதே ஆன்மநினைவுடையவோர் வாழ்க்கையை நிறைவேற்றுதற்கு உரிய முறை ஆகும் என்னும் கருத்தது இக்கலாநிலயம்.

வாழ்க்கையுடன் ஆன்ம நினைவைச் சேர்க்கவேண்டுமென்பது இக் கலாநிலயத்தின் நோக்கம் என்றும், அதற்கு உரிய முறையும்,தன்னைச் சார்ந்த ஆசையைத் தன்னோடு சாராத ஆசையாக மாற்றுவதே என்றும் கூறினோம்.இனி இந்த மாறுதல் உண்டாவதற்கு உரிய உபாயம் யாதென்பதையும் சிறிது சொல்லலாம். சித்திரம் கைப்பழக்கமாவதுபோல் இந்தச் செம்மையும் மனத்தின் பழக்கமே. பொதுவாக மனிதர்,தம்மைச் சார்ந்து தமக்கு உடைமைகளாகி, பிறருக்கு இன்றித் தமக்கே இலாபமாகக்கூடியவைகளால்தான் தமக்குப் பயனும் சுகமும் உண்டு என்று எண்ணி அந்த எண்ணத்தின்படியே விவகரிக்கின்ற வழக்கமுடையவர்களாக இருக்கின்றனர். அதனால்தான் உலகத்தில்,பகையும்பொறாமையும் கோபமும் கொடுமையும் வறுமையும், இவைகளால் விளைகின்ற துன்பமும், இவ்வளவு வீடுதோறும் வீதிதோறும் ஊர்தோறும் நாடுதோறும் உலகடங்கலும் தலைவிரித்து ஆடுகின்றன. இதற்கு மாறாகத் தம்மைச் சாராதவைகளில் இன்பம் உண்டு என்பதை அறிந்து அந்த இன்பத்தைத் துய்ப்பதற்கு வேண்டிய பயிற்சியும் பெறுவார்களானால் பின்னர் மனிதருடைய மனம் அதனையே நாடும். இத்தகைய இன்பத்தை நமக்கு லோபமின்றிஅளிக்கவல்லவை கலைகளே. அக்கலைகளிலும்,எல்லாராலும் எளிதில்எய்தவல்லது காவியக்கலைஎன்பதைஉன்னி இக்கலாநிலயம் காவியச்சுவை கைவந்து பெருகுவதற்கு ஏற்றவைகளையே இயற்றும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றது இந்தச் சுவையை எய்துவதற்கு ஓரளவு மொழிப்பயிற்சி அவசியமாகையால், தமிழில் அதிகம் பயிற்சிபெற்றிராதவர் அதனைப் பெறுவதற்கும், பெற்று, இலக்கியச் சுவையை உணர்வதற்கும், உணர்ந்து மேன்மேலும் அதனைத் தம் உள்ளத்தில் வளர்த்துக்கொள்வதற்கும், தமிழ்மொழியின் மூலமாகப் பிறமொழிகளில் உள்ள இலக்கியங்களின் நன்மைகளை அடைவதற்கும் வேண்டிய சாதனங்கள் அத்தனையும் இக்கலாநிலய இதழ்களிற் காணலாம்.

தமிழ்ப்பாடம் 101.

வில்லிபாரதம்—உத்தியோகபருவம்.

[6-வது வால்யூம் 893-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

தமிழிலுள்ள இலக்கியங்களைத் தாமே படித்து அநுபவித்துக்கொள்ளக்கூடிய பயிற்சியை யடையவேண்டுமென்னும் கருத்துடையோருக்குத் துணையாம் வகை இவ் விரண்டு ஆண்டுகளாக நாமிங்கு வரைந்து வருகின்ற தமிழ்ப்பாடங்களில் நளவெண்பா முழுவதும், அஷ்டபிரபந்தத்தில் அறுபத்துநான்கு செய்யுள்களும் முடித்தோம். இனி, கிருஷ்ணன் தூதுச் சருக்கம் துவக்கப்படும். முன்பாடங்களில் மனத்தைச் செலுத்திப் பயின்றிருப்பவர், இதனை மிகவும் சுலபமாய்த் தொடர்ந்து கற்பர். நளவெண்பாச் செய்யுள்களுக்குப் பதப்பிரிவு, பதவுரை, வினாவிடை விளக்கம், விரிவுரை முதலியன வரைந்தோம். பின் அஷ்டபிரபந்தத்தில் வினாவிடைவிளக்கத்தை விட்டோம் எனினும் பதப்பிரிவும் பதவுரையும், விரிவுரையும் எழுதினோம். இனிப் பதவுரையும், சிற்சில செய்யுள்களுக்கு மாத்திரம், விரிவுரையும் எழுதினால் போதும். நமதுநண்பர்கள் பதவுரையைப் படிக்குமுன் தங்களாலியன்றவளவு தாமே செய்யுள்களுக்குப் பொருள் காணமுயல்வது நல்ல பயிற்சியாகும். முன்சென்றுள செய்யுள்களையும் இனிவரும் செய்யுள்களையும் அவ்வப்போது மனப்பாடம் செய்துகொள்ளவேண்டுவது மிகவும் அவசியம். இல்லையேல், கற்றதொன்றும் மனதில்தங்கியிராதாகையால் இவைகளால் எய்தும்பயன் சிறியதே யாகும். கிருஷ்ணன் தூதுச் சருக்கம் முடிந்தபின் நைடதத்தில் நளன் தூதுப்படலத்தைப் பாடத்திற்கு எடுத்துக்கொள்வோம்.

பாண்டவர்கள், பன்னிரண்டு வருட வனவாசமும் ஒருவருட அஞ்ஞாதவாசமும் முடித்தபிறகும், முன்னுரைத்த மொழிப்படி தம் நாட்டைத் திருப்பித்தர மறுத்துவிட்ட துரியோதனனிடத்தில், ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பாண்டவர் தூதனுப்பிய செய்திஇச்சருக்கத்தில்அடங்கியிருக்கின்றது. இதுவரையில்முன் நிகழ்ந்திருக்கின்ற பாரதக்கதையைப் பெரும்பான்மை யாவருமறிவார். ஆதலில்அதனைச்சருக்கமாய்ச்சொல்வதும் இங்கு மிகையாகும். முன் நிகழ்ச்சிகளில் அவசியமாய்க் குறிக்கவேண்டியவற்றைச் சந்தர்ப்பம் ஏற்படும்போது அவ்வந்தச் செய்யுள்களின்கீழ் உரைப்போம். எனினும், இக்கதையில்வரும் பாத்திரங்களுடைய பூர்வசரித்திரம், அவர்களுள் ஒருவருக்கொருவர் இருக்கும் உறவு,முதலியன தெளிவாகத் தெரிந்திராதார் பலர் இருப்பர். இவைகளைமாத்திரம் முதலிலேயே சிறிது உரைத்துவைத்தல் இச்செய்யுள்களின் பொருள்களை உணர்வதற்குப் பெரிதும் உதவும்:—

தேவர்களோடு வீற்றிருந்த பிரமனது சபையின்கண் ஒருநாள் கங்காதேவி எய்தியபோது வாய்வுபகவான், அவள் ஆடைவிலகி உடல்தெரியும்படி காற்றுவீசவும், மற்றத் தேவர்களெல்லாம் தங்கள்கண்களை மூடிக்கொள்ள, வருணன்மாத்திரம் விருப்பமுடன் நோக்கவே, நான்முகன்மிகவெகுண்டு,"நீபோய் மாநு

டனாய்ப்பிறக்கக்கடவாய்" என்றுவருணனைச் சபித்து "நீயும் மானுட மடந்தையாகி அவனைச் சிறிதுகாலம் மணந்து மீள்வாய்" எனக் கங்கைக்கும் விதித்தான். இவ்வருணன்தான், புதன் யயாதி துஷ்யந்தன் பரதன் முதலியவர் தோன்றிய சந்திரகுலத்திலே சந்தனுமகாராஜனாக வந்து பிறந்தவன்.

தேவர்களில் வசுக்கள் என்பவர் எட்டுபேர். இவர்களில் ஒரு வசுவினுடையமனைவி, வசிஷ்டமுனிவரிடம் இருந்தகாமதேனுவைத் தான் அடையவேண்டுமென்றாசைப்பட்டு, அப்பசுவை எப்படியாகிலும்தனக்குக் கொண்டுவந்து கொடுக்கும்படி தன்கணவனைத் தூண்டினாள். அவனும் பெண்டாட்டி சொல்லுக்கு உடன்பட்டு, மற்றைய ஏழு வசுக்களையும் தனக்குத் துணையாக அழைத்துக்கொண்டுபோய் வசிட்டருக்குத் தெரியாமல் இரவில் அக் காமதேனுவைத் திருட முயன்றான். அதனை அறிந்த வசிட்டமுனிவர், "நீங்கள்போய் மண்ணுலகில் மானுடராய்ப் பிறக்கக்கடவீர்," என அவ்வசுக்களைச் சபித்து, "துணையாகத் திருடவந்த நீங்கள் எழுவரும் பிறந்தவுடன் சாபம் நீங்கி வானுலகம் மீண்டுவிடலாம்; மற்று, மனைவியின்மொழிக்கிணங்கித் திருடத்துவக்கிய இவ்வொரு வசுமாத்திரம், மனைவியினின்பம்இல்லாமல் அநேககாலம் மண்ணுலகத்தில் இருக்கட்டும்" என்று ஏவினார்.

இந்தச் சாபத்தின்படி வசுக்கள் வானத்திலிருந்து வழுவி விழுந்துகொண்டிருக்கும்போதுதான், கங்காதேவியும் பிரம்மன் விதிப்படி சந்தனுவை மணக்கப் பூமியை நோக்கி இறங்கிக்கொண்டிருந்தாள். அவள் வசுக்களைநோக்கி 'உங்களுக்கேன் இந்தக்கதி வந்தது' என வினவ அவர்களும், வசிட்டனால்தாம்சாபம்பெற்றதைச் செப்பினர். கங்காதேவியும் தான் மானுடமகளாய் அமையவிருப்பதைச் சொல்லி "என் வயிற்றில் வந்து பிறப்பீராயின், நீண்டகாலம் நீங்கள்நிலவுலகில் தங்காவண்ணம், பிறந்தவுடன் உங்களைக் கொன்று கொன்று வானுலகம் மீளும்படி செய்கின்றேன்" என வாக்களித்தனள்.

பின்னர், பூவுலகம் சேர்ந்து கங்கையாற்றங்கரையிலிறங்கிய கங்காதேவியைச் சந்தனுமகாராஜன் கண்டு காமுற்றுத் தன்னைமணக்கும்படிவேண்டலும் அவள் "யான் எதுசெய்தாலும் நீ சிறிதும் கூசாது பொறுத்திருப்பாயானால் உன்னை யான் மணந்துவாழ்வேன். அவ்வாறின்றி என்றைக்கேனும் என்செயலை மறுப்பாயாயின் அன்றைக்கே நான் உன்னைவிட்டுப்பிரிந்து போய்விடுவேன்—இது சம்மதமோ" என அவனும் இசைந்து கையறைந்து தந்தனன். சங்கேதப்படி ஒவ்வொரு வசுவாய் இவளது வயிற்றில் பிறக்கப் பிறந்தவுடன் அம்மகவை ஆற்றில் அமிழ்த்தினாள். சந்தனுவும் பதைபதைத்த உள்ளத்தோடு இவ்வாறு ஏழு குழந்தைகளை அவள் கொல்வதைக் கண்டு பொறுத்திருந்தானானாலும், எட்டாவது வசுவும்—இவன்தான் பெண்சொல் கேட்டுப் பசுதிருடப் புகுந்தவன்—பிறந்தக்கால்மிக இரங்கி, "இப்புதல்வனையேனும் கொல்லலாகாது" என்று கங்கையைவேண்ட அவள், தான் தன்கணவன்இம்மக்கள் முதலியவர்களுடைய முன்பிறப்பு வரலாறுகளை உணர்த்தி, முன்னுரைத்தமொழிப்படியே அகன்றனள். அப்புதல்வன் பெயர் தேவவிரதன். இவன் தனது அன்னையோடுசென்று சிறிதுகாலம் இருந்து பிறகு தந்தையின்பால் வந்துசேர்ந்தான். இவனுக்கே பின் பீஷ்மன் என்னும் பெயரும் வந்தது. இது இவ்வாறாக.

சேதிமன்னவர் வம்சத்தைச் சேர்ந்த வசுராசன் என்பவன் ஒருநாள் விமானத்தில் ஆகாயமார்க்கமாய் யமுனையாற்றின்மேலே செல்கையில், அவன் மனைவி கிரிகை யென்பவளைக் காமமிகுந்த கருத்தோடு நினைக்க வீரியம் வழுவி விழலும், ஒரு முனிவனது சாபத்தால் மீனாக அந்நதியில் உழன்றிருந்த ஒரு தேவகன்னிகை அதனை இரையென்று விழுங்கவே அம்மீன் கருக்கொண்டது. செம்படவர் அம் மீனைப் பிடித்து அரிந்தபோது அதன் வயிற்றில் ஆண்குழவி யொன்றும் பெண்குழவி யொன்றும் இருக்கக்கண்டு, பிள்ளையை வசுராசனிடத்தில் சேர்த்துவிட்டுப் பெண்ணைச் செம்படவர் தலைவனே வளர்த்துவருவானாயினான். மீன்வயிற்றிற்பிறந்த நாற்றத்தோடு இருந்ததால் இவளுக்கு மச்சகந்தி என்று பெயர் இட்டனர். இவள் நல்லெழில்நங்கையாய் வளர்ந்துவருநாளில், உத்தமபுத்திரன் பெறுவதற்குரிய சிறந்த இலக்கினங்களெல்லாம் சேர்ந்திருப்பது கருதிப் பராசரமுனிவர் தான் கூடுதற்கொரு பெண் எங்குளள் என்று நாடிவருங்கால் இம்மச்சகந்தியைச் சந்தித்து, அவளதுபுலவுநாற்றத்தைமாற்றி நன்மணங் கமழும்படி செய்து அவளோடு சேர்தலும் உடனே, அவள் வயிற்றில் வேதவியாச முனிவர் பிறந்தார். பிறந்ததும் அவர் அன்னையை வணங்கி "நீ என்னை நினைக்குங்கால் வருவேன்" என வாக்களித்துப் போயினார். பராசரரும் மீண்டுமவளைக் கன்னியே ஆக்கிவிட்டு அகன்றனர். அவளும்அன்று தொட்டுப் பரிமளகந்தி ஆயினாள். இவளுக்குச் சத்தியவதி என்ற பெயரும் உண்டு.

கங்காதேவியைப் பிரிந்தபின்னர், அவள் வயிற்றிற் பிறந்த தன் புதல்வன் தேவவிரதனோடு இருந்து அரசு செலுத்திவந்த சந்தனுமகாராஜன் ஒருநாள் வேட்டைமேற்சென்று யமுனையாற்றின் கரையை அடைய அங்குப் பரிமளகந்தியைச் சந்திக்கலாகி அவள்பால் அடங்காக் காமம் மிகக்கொண்டு மணம்வேண்ட, அவளைத் தந்தையாய் வளர்த்திருந்த அவ்வலைஞர்தலைவன், "உனக்கு வேறோர் மகன் இருப்பதால் இவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு அரசு வாய்த்திடாது, ஆகையால் இப்பெண்ணை யான்உனக்கு மனைவியாக அளிக்கமாட்டேன்" என்ன மறுத்தனன். மனமும் முகமும் வதங்கி மீண்ட தன் தந்தையை நோக்கிய தேவவிரதன் காரண முணர்ந்து, "யான் அரசு வேண்டேன், ஒருகால் என் வயிற்றில் பிறக்குமோர் மகன் அதனை வேண்டுவானோ, என்ற உன் சங்கை தீர, யான் விவாகமே ஒருநாளும் செய்துகொள்வதில்லைஎன்று சத்தியம் செய்கின்றேன்" என்று பரிமளகந்தியின் தந்தைக்கு வாக்களித்து அவளைத் தன் தந்தைக்கு மணமுடித்து வைத்தனன். பயங்கரமான இந்த நித்யபிரமசாரி விரதத்தைப் பூண்டதால் தேவவிரதனுக்குப் பீஷ்மன் என்றபெயர் வரலாயிற்று.

சந்தனுவுக்குச் சத்தியவதி யென்னுமப் பரிமளகந்தியின் வயிற்றில் சித்திராங்கதன் விசித்திரவீரியன் எனப் புத்திரர் இருவர் பிறந்தபின் அம்மன்னன்விண்ணுலகுஏறினான். தானுரைத்த சபதத்தின்படியேபீஷ்மன் அரசனாகாமல் சித்திராங்கதனை அரசனாக்கினான்; ஆயினும் ஒரு கந்தருவன், "எங்களுடைய பேரை இவன் ஏன் கொள்ளவேண்டு"மென்று சித்திராங்கதனைக் கொன்றுவிடப் பிறகு பீஷ்மன் அவன் தம்பி விசித்திரவீரியனை அரசனாக்கி அவனுக்குக் காசிதேசத்து மன்னனது புதல்வியர் அம்பிகை அம்பாலிகை என்னும் இருவரை மணம்செய்வித்தனன். சிறிதுகாலஞ் சென்றபின் இவ் விசித்திரவீரியனும் மகவின்றி மாய்ந்திட நேர்ந்தது. இன்னமும் பீஷ்மனோ அரசு கொள்ளான்; அத்தினபுரிக்கோ ஓர் மன்னன் இல்லை. சந்திரகுலமும் அற்றுவிடும் நிலை வந்துற்றது.

இலக்கணம்

சென்றவாண்டுப் பிற்பகுதி இதழ்களில் புணர்ச்சியிலக்கணம் ஆரம்பித்தபோது, அவ்விலக்கணம் நிலைமொழியிறுதியையும் வருமொழிமுதலையும் நோக்கி நான்குவகை யாகும் எனக் கூறினோம். (6-வது வால்யூம், 558-வது பக்கம்) அந் நான்குவகைகள் :—

I நிலைமொழி யிறுதி மெய் + வருமொழி முதல் உயிர்

உதாரணம்:-மனிதன் + ஓடினான் = மனிதனோடினான்

கண் + அழகு = கண்ணழகு

மரம் + அடி = மரவடி

மரம் + ஏறினான் = மரமேறினான்.

இப்புணர்ச்சியின் விதிகளை, 6வது வால்யூம் 575, 590, 599, 619, 635, 647 பக்கங்களிற் காணலாம்.

II(1)நிலைமொழி யிறுதி உயிர் + வருமொழிமுதல் உயிர்

உதாரணம்:—

கிளி + எங்கே = கிளியெங்கே

தீ + எரிந்தது = தீயெரிந்தது

பலகை + அறுத்தான் = பலகையறுத்தான்

அவனே + இவன் = அவனேயிவன்

ஏ + எய்தான் = ஏவெய்தான்

செய்ய + அழைத்தான் = செய்யவழைத்தான்

காணு + ஓடினான் = காணுவோடினான்.

இவ்விதம் யகர வகர உடன்படுமெய்கள்பெற்றுப் புணர்வதன் விதிகளையும், அ + ஆறு = அவ்வாறு என்று ஆவதுபோன்ற விதிகளையும், 6-வது வால்யூம் 695, 715, 733, 760, 780 பக்கங்களிற் காணலாம்.

(2) நிலைமொழியிறுதி உகரம் + வருமொழி முதல்உயிர்

உதாரணம்:—

கொணு + அமர்ந்தான் = கொணுவமர்ந்தான்

நிலவு + ஒளி = நிலவொளி

சாம்பு + ஓசை = சாம்புவோசை

வந்தது + ஏ = வந்ததுவே

சென்று + இரந்தான் = சென்றிரந்தான்

உதடு + அறந்தது = உதடறந்தது

காடு + ஆறு = காட்டாறு

குரங்கு + இனம் = குரக்கினம்

இவ்விதம், உகரம்கெட்டும்கெடாமலும், ஈற்றுமெய் இரட்டியும் இரட்டாமலும், ஈற்றக்கு அயல் மெல்லினமெய் திரிந்தும் திரியாமலும், புணர்வதற்குரிய விதிகள், 6-வது வால்யூம் 814, 828, 859, 871, 891 பக்கங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

III நிலைமொழியிறுதி உயிர் + வருமொழி முதல் மெய்

உதாரணம்:—

அ + நாடு = அந்நாடு

இ + யானை = இவ்யானை

முனிவு + யாது = முனிவியாது

படகு + யாது = படகியாது

மரத்தை + வெட்டினான் = மரத்தைவெட்டினான்

களிறு + காடு = களிற்றுக்காடு

காடு + பூனை = காட்டுப்பூனை

தலை + பாகை = தலைப்பாகை

நாடு + சென்றான் = நாடுசென்றான்

இவைகளுக்கு விதிகள் இன்னும் உரைக்கப்படவில்லை. இவைகளையே இனி ஆரம்பம் செய்வோம். இதன்பின் கீழ்வரும் நான்காம்வகை கற்பதற் கிருக்கின்றது.

IV நிலைமொழி யிறுதிமெய் + வருமொழி முதல் மெய்

உதாரணம்:—

மெய் + பொருள் = மெய்ப்பொருள்

மண் + குடம் = மட்குடம்

பல் + பொடி = பற்பொடி

வந்தேன் + யான் = வந்தேனியான்

மரம் + கண்டான் = மரங்கண்டான்

கடல் + திரை = கடற்றிரை

கோல் + துறந்தான் = கோறுறந்தான்

மண் + வெட்டி = மண்வெட்டி.

இப் பாடங்களை ஓதிவரும் நண்பர்கள், இதற்கு முன் உரைத்திருக்கும் வேற்றுமை இலக்கணத்தையும் தொடர் இலக்கணத்தையும் மீண்டுமோர்முறை படித்துச் செவ்வனேபயின்றுகொள்வாராயின், இனி வருவதற்கிருப்பனவற்றைஎளிதில்கற்றுணர்வதுமல்லாமல் அவைகளை மறவாது காத்துங்கொள்வர்.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

(Rights of republication reserved)

முன்னுரை

பாடுவோர் பொருளும் கருத்தும் அறிந்து பாடினாலன்றி ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அனைய பெரியோர் தம் பாடல்களைக் கேட்போர் இதயம் பக்தியால் இளகி உவகை பெருக இயலாது. அக்கீர்த்தனைகள், இசைகளோடு கூடிய ஒலிகள் மாத்திரமே அல்ல. ஆழ்ந்த கருத்தும் அழகிய பொருளும், உள்ளவை அவை. இசையின் இலக்கணத்தோடு, பொருள் நயமும் அமைந்திருத்தலாலே இக்கீர்த்தனைகள் பண்பும் பயனும் உடையவைகள் ஆகின்றன. ஏனைய எல்லாக் கல்விகளையும்போல் இசைக்கல்வியும், வாலறிவன் நற்றாள் தொழவைக்காதெனின் பயனற்றதாம். ஆதலால், அத்தகைய மெய்ப்பயன் பெருகுவதற்கு, ஸங்கீத வித்வான்களும் ஏனையோரும் தாம் பாடுகின்ற கீர்த்தனைகளின் பொருளை அறிந்திருக்கவேண்டுவது அவசியம். இதுபற்றியே, இங்கு வெளிவரும் கீர்த்தனைகள் உரையுடன் வெளியிடப் பெறுகின்றன.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் பாடியிருக்கின்ற கீர்த்தனைகள் பல இன்னும் பலருக்குத் தெரியாமலிருக்கின்றன. தெரிந்திருக்கின்ற கீர்த்தனைகள் சிலவற்றின் சரியான பாடங்களைப் பலர் அறியமாட்டாமலும் இருக்கின்றனர். இவ்விதழ்களில் வருகின்ற கீர்த்தனைகள் பெரும்பாலும் இதுவரையில் இசையுலகில் வெளிவந்து உலவாதவைகளாம். இவைகள் பலவகைகளில் முயன்று சேகரிக்கப்பட்டவை. சங்கீதத்தில் சிறிது பயிற்சி

யிருப்போர் யாவரும் எளிதில்கற்றுப் பிழையின்றிஇனிது பாடுவதற்கு இயன்றபடி, ஸ்வரசாஹித்தியதாளக் குறிப்புக்களுடன் இக்கீர்த்தனைகள் இங்கு வரைந்து காட்டப்பெறுகின்றன. இப்பொழுது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைகள் இவை வரையப்பெறுகின்ற முறையிலேயே பின்னர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர், ஸ்ரீசியாமி சாஸ்த்திரி முதலியவர்களுடைய கீர்த்தனைகளும் இவ்விதழ்களில் வெளிவரலாம்.

P. B. ஸ்ரீநிவாஸாசாரியன்.

ஸ்ரீ த்யாகராஜஸ்வாமி ஸ்தோத்ரம்.

ராகம்—தேவகாந்தாரி] [தாளம்—ஆதி.

பல்லவி

ஸ்வாமிகி ஸரி யெவ்வரனவசு—
ஸ்வர ராக ஸுதா நிதி சந்த்ருடைந..............................(ஸ்வா)

அநுபல்லவி

பூமி லோனு ஸகல ஜனுலு மோதமுதோ
பொகட தகிந ஸத் கீர்த்தி வஹிஞ்சின..............................(ஸ்வா)

சரணம்

1. தரலோ கான மப்யஸிம்சின
நருலெல்ல விட மார்க்குலேயோனி
கருணதோ வாரிகி மோக்ஷமந்துருசி
கல்கு நட்டு கீர்த்தனமுல ரசிஞ்சின.............................. (ஸ்வா)

2. பரதன காந்தா மணுல காவிம்சக
நரநாதுல கொலிசி பொகடக தீருடை
வரஸங்கீதமு மோக்ஷத மநி யெம்சி
பரமாத்முடைந ஸ்ரீராமுனி பஜிம்சின..............................(ஸ்வா)

3. கானலோனுடேள வேங்கடேஸ்வருநி தன
கானமுசே பரவசமுகா ஜேஸி
மானக நே தன ஹ்ருதயகமல மைந
மந்திர முனனும்சு கொநிந ஸ்ரீத்யாகராஜ..............................(ஸ்வா)

பொருள்.

ஸ்வரராக ஸுதா நிதி சந்த்ருடையன - ஸ்வரம் என்ற பாற்கடலில் தோன்றின சந்திரனை, (த்யாகராஜ) ஸ்வாமிகி - ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிக்கு, ஸரி எவ்வரு அனவசு- ஸமானமானவர் யாரென்று நாம் கூறலாம் ? (ஒருவரையும் கூற முடியாதென்பது கருத்து)

பூமிலோனு ஸகலஜனுலு - பூமியில் ஸகல ஜனங்களும், மோதமுதோ - ஸந்தோஷத்துடன், பொகட தகிந - புகழத் தகுந்த, ஸத்கீர்த்தி வஹிஞ்சின-நல்ல கீர்த்தியைத் தாங்கிய, ஸ்வாமிகி ஸரி எவ்வரு அனவசு - (ஸ்ரீ த்யாகராஜ)ஸ்வாமிக்குஸமான மானவர் யாரென்றுநாம் கூறலாம்?

தரலோ- பூமியிலே, கானமு அப்யஸிம்சின நருலு எல்லன் - ஸங்கீத வித்யையை அப்பியசித்த மனிதர்களனைவரும், விடமார்க்குலேயே ரனி-தூர்த்தர்களாகவே நடத்தையுடையவர்களா யிருக்கிறார்களென்று, வாரிகி - அப்படிப்பட்டவர்களுக்கு, மோக்ஷமந்து-மோக்ஷத்திலே, ருசி கல்கு நட்டு - ருசியுண்டாகும்படி, கருணதோ - பரம கிருபையுடன், கீர்த்தனமுல ரசிஞ்சின - கீர்த்தனைகளையியற்றிய, ஸ்வாமிகி ஸரி யெவ்வரு அனவசு - ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிக்குஸமானமானவர்யாரென்று நாம்கூறலாம்?

பரதன - பிறர்களுடைய தனத்துக்கும், காந்தாமணுலகு - ஸ்த்ரீகளுக்கும், ஆவிம்சக - ஆசை வைக்காமலும், நரநாதுல கோல்சி பொகடக - நரபதிகளை (அதாவது, அரசர்களை)நெருங்கிப் புகழாமலும், தீருடை-சிறந்த மனவுறுதியையுடையவராய், வர ஸங்கீதமு - சிறந்த ஸங்கீதமானது, மோக்ஷதமு அநி எம்சி - மோக்ஷத்தைத் தரவல்லது என்று மனந்துணிந்து, பரமாத்முடைந - பரமாத்மாவான, ஸ்ரீராமுனி பஜிம்சின - ஸ்ரீராமமூர்த்தியை உபாஸனை செய்த, ஸ்வாமிகி ஸரி எவ்வரு அனவசு - ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிக்குஸமானமானவர்யாரென்றுநாம்கூறலாம்?

கான லோனுடேள - கானலோலனை, வேங்கடேஸ்வருநி - ஸ்ரீநிவாஸப் பெருமானை, தன கானமுசே - தம்முடைய ஸங்கீதத்தினல், பரவசமுகா ஜேஸி-பரவசமுறும்படி செய்து, மானகநே தன ஹ்ருதய கமலமைந மந்திரமுனு - தம்முடைய ஹிருதய கமலமான கோயிலில், உஞ்சு கொநிந-அமர்ந்திருக்கச் செய்துகொண்ட, ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகி ஸரி எவ்வரு அனவசு - ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிக்குச் சமானமானவர் யாரென்று நாம் கூறலாம் ?

[குறிப்பு:—இந்தக் கீர்த்தனம், ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகளின் நெருங்கிய பந்துக்களில் ஒருவரும், அவருடைய அந்தரங்க விசுவாசத்துக்குப் பாத்திரரான பிரதம சிஷ்யரும், ஸ்வரஸாஹித்ய அமைப்புக்களில் அவருக்குப் பெரிதும் உதவிபுரிந்தவரும், பட்டணம் ஸுப்ரமண்ய ஐயரென்ற பிரஸித்த ஸங்கீத வித்வானுடைய குருவும், மஹானுபாவருமாகிய மானம்புச் சாவடி வேங்கடஸுப்பையரால் செய்யப்பட்டதாகும். ஸ்வாமிகளின் கீர்த்தன இரத்னங்களை அனைவருக்கும் பயன்படும்படி புதிய முறையில் வெளியிட வேண்டுமென்பது அடியேனுடைய விருப்பமாதலால், அவரைப்பற்றிய இந்த ஸ்தோத்ரத்தை இங்கு முதலாகத் தரலானேன். இந்தக் கீர்த்தனையிலுள்ள ஒரு விசேஷம் யாதெனில், இதிலுள்ள பதங்களிற் பெரும்பான்மையானவை ஸ்வாமிகளின் கீர்த்தனங்களில் முதலிலோ அல்லதுவேறு முக்கியபாகங்களிலோ பயின்றுள்ள பதங்களாகவே உள்ளன, என்பதாகும்.]

தேவகாந்தாரி ராக லக்ஷணம்

இந்த ராகம் 72 மேளகர்த்தா ராக மதப்படி, 29-வது மேளமான தீரசங்கராபரணம் என்ற ராகத்தில் ஜன்யமானது. இதில்,சதுஸ்ருதி ரிஷபமும்,சதுஸ்ருதி தைவதமும், விசேஷ ஜீவஸ்வரங்களாக விளங்குகின்றன. இதில் சில இடங்களில் ஆரோஹணத்தில் காந்தாரமும் நிஷாதமும் பேசுவதுண்டு. இதன் விசேஷப் பிரயோகங்கள் முதலியவற்றைக் கீதகீர்த்தனுதிகளால்தான் அறியவேண்டும். இந்த இராகம் எப்போதும் பாடத்தக்கது.

ஆரோஹணம்:—ஸரிமபதஸ்.
அவரோஹணம்:—ஸ்நிதாபமாகரீஸ.

ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[இந்தக் கீர்த்தனத்தை இரண்டு களைச் சவுக்கத்திற் பாடவேண்டும்.]

பல்லவி

; * ஸ்ா, ஸ்ஸ்ா — ஸ்நிதா — நிதபா | ; — தநீ தபா | பபமா — மகரீ ||
; * ஸ்வா, மிகி — ஸ· · — ரி· · | ; — யெவ்·வர | ன · · — வ·சு ||

; * ஸ்ா, ஸ்ஸ்ா — ஸ்நிரிஸ்தா ; — ரிதநிதபா ; | ; — தநீ தபா | பமதபமா ;— மகரிகரீ; ||
; * ஸ்வா, மிகி — ஸ. . . . ; — ரி. . . . ; | ; — யெவ்.வர | ன. . . . ;— வ. சு. . ; ||

; * ஸஸதா; தா ரிஸ நீ; | ; — பமா, பா | மகரீ — ஸரிமப ||
; * ஸ்வரரா; க ஸு. தா; | ; — நிதி, சந்த் | ரு · · — டை · · · ||
தா *
ன * (ஸ்வாமிகி)

அநுபல்லவி

; * தா, ஸ் — ரீ; ரீ — ரிம்க்ரி | ; ஸ்ரிஸ்ா தா | ஸ்நிதா — ரீஸ்ா ||
; * பூ, மி — லோ, னு — ஸகல · | ; ஜனுலு மோ | த · · — முதோ ||

; * தா, ஸ் — ரீ; ரீ — ஸ்ஸ்ரிமாரீ | ; — ஸ்ரிஸ்நிததா ; ; | ஸரிஸநிதா ; — ரீஸா ||
; * பூ, மி — லோ; னு — ஸகல · · | ; — ஜ · னு · · மோ ; ; | த · · · ·, ; — முதோ ||

; * ஸ்ஸ்ஸ் ஸ்ா — ஸ்நிதா — நிதபா | ; , — நீதபா | மகரீ — மபதா ||
; * பொகடத — கி · ன — ஸ · த் | ; , — கீர்த்திவ | ஹிம் · — சி · ன ||

தா * ஸ்ஸ்ஸ் ஸ்ா — ஸ்ரிஸ்நிதா ; — தநீதபா ; | ; , — நீதபா | மகரீ — மபதா ||
· * பொகடத — கி · · · ன ; — ஸ்த் · · ; | ; , — கீர்த்திவ | ஹிம் · · — சி · ன ||
தா *
· * (ஸ்வாமிகி)

சரணம்

; * பா, பபா — மகரீ — மபதா | ; — ஸ்ா, நிதா | — தா ; — நிதபா ||
; * கா, னலோ — லு · டேள — வேங்க | ; — டேஸ், வரு | — நி ; — த · ன ||

, * பா, பபா — பமமா மகரீ — மபதா | ; — ஸ்ா, நிதா | நிதபா —மகரீ ||
; * கா, னலோ — லு . . டேள · · — வேங்க | ; — டேஸ், வரு | நி · · —த · ன ||

; * பா, பபா — பாமா — தாதா | ; — ததாஸ்ஸ்ா | ஸ்நிதா — ரீஸ்ா ||
; * கா, நமு — சே · — பர | ; — வசமுக | ஜே · · — · ஸி ||

'மானகனே......................ஸ்ரீ த்யாகராஜ'— இந்த ஸாஹித்யத்தை அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

தமிழ் வேதக் கடலமுதம்.

வடமொழி மறை யென்றும் தென்மொழி மறை யென்றும் வேதம் இருவகுப்பாக வுள்ளது. வடமொழி மறையிற் போலவே தென்மொழி மறையாகிய ஆழ்வா ரருளிச்செயல்களிலும் பலபல விசேடப் பொருள்கள் அறியக்கிடக்கின்றமையால், பூருவர்கள் எடுத்துக் காட்டியுள்ள அப்பொருள்களைத் தொகுத்து ஈண்டு வெளியிடுகின்றனம்.

பேரருள் பொலிய நிற்கும் பரம்புருடன், அந்தமில் காலமாகத் தொடர்ந்துவரும் அகவிருளினல் ஆக்கிரமிக்கப்பட்டு அதனல் ஒருவகையான விவேகமுமின்றியே பிறவிக்கடலுள்நின்று துளங்கு மெய்போலியர் ஞானமாகிற சுடர்விளக்குப் பெற்று அதனல் அகவிருள் அகன்றொழியப்பெற்று வேதாந்தங்களில் விளங்கும் விளக்காகிய தன்னைத் தக்க ஞானக்கண்களாலே கண்டு நன்மை தீமைகளைப் பகுத்துணர்வதற்காக "மறையாய் விரிந்த விளக்கு" என்றும் "துளக்கமில் விளக்கு" என்றும் ஆன்றோர்களால் விளக்காகச் சொல்லப்பட்டு வேதமனைத்துக்கும் வித்தாகி ஒருநாளும் சலியாமல் நின்று எல்லாப் பொருள்களையும் விளக்குவதான அகாரத்தில் நின்று தோன்றியவையாய்ச் சிறுவிளக்கினின்று தோன்றின பெருவிளக்குப்போலே யான பன்னுகலை நால்வேதங்களைத் தனது இயற்கை யின்னருளால் வெளியிட்டருளினன்.

'நன்மை தீமைகளைப் பகுத்துணர்வதற்காக' என்றோம்; அவ்வுணர்வுக்குப் பயன் யாதுகொல்? என்னில்; விடவேண்டியவற்றை விடுகையும் பற்றவேண்டியவற்றைப் பற்றுகையுமே பகுத்துணர்வுக்குப் பயனும். இழிவானவை இன்னவையென்று தெரிந்துகொண்டு அவற்றை விட்டொழிக்கவும், சிறந்தவை இன்னவையென்று தெரிந்துகொண்டு அவற்றைப் பற்றவுமே பகவான் சாஸ்திரங்களை அருளினன் என்றதாயிற்று.

இனி, வெறுக்கத்தக்கது எது? விரும்பத் தக்கது

எது? எனின்; உலகில் ஒவ்வொருவரும் 'எனக்குச் சுகமுண்டாதல் வேண்டும், துக்கமுண்டாகலாகாது' என்றிருக்கக் காண்டலால் அனைவர்க்கும் சுகம் விருப்பமாய்த் துக்கம் வெறுப்பாமென அறுதியிடற்பாலது.

உலகில் இன்பதுன்பங்கள் ஒரேவகையாக இல்லை; சுகத்திற் பல கணுக்கள் உள்ளன; அங்ஙனமே துயரத்திலும் பல கணுக்கள் உள்ளன. ஆகவே, 'இதற்கு மேற்பட்ட துக்கமில்லை' என்னும்படியாக எல்லையான துன்பமும், 'இதற்கு மேற்பட்ட சுகமில்லை' என்னும்படியாக எல்லையான இன்பமும் இன்னதென்று கண்டுணர்தல் இன்றியமையாதது. ஆகவே அதனை ஆய்ந்துகூறுவாம். துன்பத்திற்கு எது எல்லையெனின் பிரகிருதிப்பற்றினால் நேர்கின்ற பிறப்புக்களினின்று ஒருகாலும் நீங்காமைக்கு உறுப்பானவையாய், பல்வகைப்பட்டிருப்பவையாய், அகப்பட்டவர்கள் தப்பமுடியாதவையாய் இன்னமுதெனத் தோன்றிஎப்படிப்பட்ட அறிவுடையாரையுங் கலங்கப்பண்ணுதலால் ஆச்சரியங்களாய் இராநின்ற கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்டவின்பமாய சிற்றின்பங்களிலே துவக்குண்டு ஸம்ஸாரத்திலே அழுந்துதற்கு மேற்பட்ட துன்பமிலதாதலால் இதுவே துன்பங்கட்கு முடிவான எல்லையாம். இங்ஙனம் இன்பத்திற்கு எல்லை ஏதென்னில்; அற்பங்களும் அநித்தியங்களுமான தீய விஷயங்கள் கிடைப்பதனாலுண்டாகின்ற களிப்பும் அவை கிடையாமற் போவதனாலுண்டாகின்ற கவலையுங் கழிந்து அந்தமில் பேரின்பமாய திருநாட்டின்கண் அடியார்கள் குழாங்களையுடன்கூடி இடையறாத எம்பெருமானது அநுபவத்தினால் ஆனந்தமயமாயிருத்தற்கு மேற்பட்ட இன்பமிலதாதலால் இதுவே இன்பத்திற்கு முடிந்த எல்லையாம். எனவே, இருள்தருமா ஞாலத்திலே மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து அலமந்து அழுந்துகை துன்பங்கட்கு எல்லை, நலமந்தமில்லததோர் நாடுதன்னில் இடைவிடாது எம்பெருமானை யனுபவித்தல் இன்பங்கட்கு எல்லை என்றதாயிற்று.

மேற்சொன்ன வகையான துன்பத்திலேயே பலர் ஆழ்ந்து கிடப்பதற்கும், சிலர் மேற்சொன்ன இன்பவெல்லை சென்று சேர்தற்கும் அடி ஏதெனின்; கேண்மின். உய்வுபெற வேண்டியவர்கள் முக்கியமாக ஐந்து பொருள்களைத் தெரிந்துகொள்ளல் அவசியமாயிராநின்றது. அவை தாம் எவையெனின்; பரம்புருடனாகிய எம்பெருமானுடைய சொரூபத்தை யறிதல், அப்பரமனைச்சென்று சேரப் பிறந்த ஆன்மாவாகிய தனது சொரூபத்தை யறிதல், அவனை அணுகுவதற்குறுப்பான வழி இன்னதென்று உபாயத்தின் சொரூபத்தை யறிதல், அவனை அணுகவொட்டாமல் தடை செய்கின்ற விரோதியின் சொரூபத்தை யறிதல், தடை நீங்கி அவனை அணுகியபின் பெறக்கடவதான பேற்றின் சொரூபத்தை யறிதல்—என இவையாம். இவையே அர்த்தபஞ்சகஜ்ஞானமெனப்படும். இவை சுருங்கச் சொல்லப்படின், பரஸ்வரூபம், ஸ்வஸ்வரூபம், உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம், புருஷார்த்தஸ்வரூபம் ஆகிய இவற்றின் உணர்வு எனப்படும். இத்தகைய ஐம்பொருளுணர்வு குறையற்றிருத்தல் கீழ்ச் சொன்ன இன்பவெல்லை நேர்தற்குக் காரணம்; அஃதில்லாமையே துன்பவெல்லையி லாழ்தற்குக் காரணம்.

எனவே, ஸகல சாஸ்திரங்களின் தேர்ந்த பொருளாய் ஆன்மா உய்வதற்கு இன்றியமையாதனவான ஐம்பொருள்களின் அறியாமையும் அறிதலுமே ஸம்ஸார மோக்ஷங்களுக்கு முறையே காரணமாவன என்றதாயிற்று.

இனி, அவ் வைம்பொருளுணர்வு சிலர்க்கு உண்டாவதற்கும் ஏனையோர்க்கு அஃதுண்டாகாதொழிதற்கும் அடி ஏதெனின்; ஸத்துவம், ரஜஸ், தமஸ் என முக்குணங்கட்கு நாம் வயப்பட்டுள்ளோமென்பது அனைவருமறிந்ததே; அவற்றுள் பிந்தின இரண்டு குணங்கள் மலிந்திருக்கப் பெறுதலே ஐம்பொருளுணர்வு உண்டாகாதிருத்தற்குக் காரணம்; முக்குணத்து இரண்டவை யகற்றி ஒன்றினிலொன்றி நிற்றலாகிற ஸத்துவகுண மேலீடே ஐம்பொருளுணர்வு நேர்தற்குக் காரணம். ரஜோ குணமும் தமோகுணமும் விபரீத ஞானத்தை விளைப்பனவாய், ஸத்துவ குணம் உண்மையறிவை உய்ப்பதாயிருத்தல்பற்றி ஆன்றோர் இங்ஙனம் கூறுப.

இனி, சிலர்க்கு ரஜோகுணமும் தமோகுணமும் மலிந்திருத்தற்கும் ஏனையோர்க்கு ஸத்துவகுணம் தளிர்ப்பதற்கும் காரணம் என்னை? எனின்; இருள் தருமா ஞாலத்துட் பிறவியெனப்படுகிற இந்நிலத்திற் பிறப்பு ரஜஸ் தமோ குண வளர்ச்சிக்கு ஏதுவாம்; "பிறக்கும்போது எவ்வுயிரை எம்பெருமான் அமலத்திருக்கண்களாலே நோக்கியருள்வனோ அவ்வுயிரே ஸாத்விகன், அவனே முத்திபெற விரும்புவான்" என மாமுனிகள் இயம்புதலால் அங்ஙனம் பிறப்புக்காலந்தன்னில் நேர்கின்ற பரமபாவனமான பகவத் கடாக்ஷமே ஸத்துவகுண நிறைவுக்கு ஏதுவாம்.

அப் பிறப்புக்கும் பகவத் கடாக்ஷத்திற்குந்தான் மூலம் ஏதென்னில்; சார்ந்த இருவல்வினைகளென்று ஆன்மாவோடு பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக் கிடக்கின்ற பிரபல புண்ணிய பாபங்கள் பிறப்புக்கு மூலமாம்; "தொல்லருள் நல்வினை" என்று சொல்லப்படுகிற எம்பெருமானது இயற்கையினருளாகிற ஸுகிருதம் பிறவிக்காலத்துக் கடாக்ஷத்திற்கு மூலமாம்.

கீழ்ச் சொன்ன புண்ணிய பாபங்களென்னுங் கருமங்கட்கும் ஒரு வித்து உண்டு; அஃது ஏதெனின்; பொய்ந்நின்ற ஞானமு மென்கிற அவித்தையேயாம். அப்படியே எம்பெருமானது அருளுக்கும் ஒருவித்து உண்டு; அதுதான் அருள் புரிந்த சிந்தை யென்கிற ஸௌஹார்த்தம். ஆன்மாக்கள் உய்தற்கு எம்பெருமான் முயற்சிசெய்யப் புகுதற்கு மூல காரணமாக 'ஸௌஹார்த்தம்' என்பது சாஸ்திரங்களிற் கூறப்பட்டுளது; இஃதடியாகவே அப்பெருமானது திருவுள்ளத்தில் ஆன்மாக்கள் திறத்து இரக்கம் பிறப்பது.

"மூதாவியில் தடுமாறு முயிர் முன்னமே" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தவாறு ஆன்மாவுக்கு அநாதியாகவே மூதாவி யென்னும் அசித்தோடு தொடர்பு உள்ளது; அதுவே அவிஞ்சைக்கு அடியாவது. "சோர்ந்தே புகல்கொடாச் சுடரை யரக்கியை மூக்கீர்ந்தாயை, அடியே னடைந்தேன் முதன் முன்னமே" என்று அவ்வாழ்வார் தாமே கூறியுள்ளவாறு எம்பெருமானோடு தொடர்பும் ஆன்மாவுக்கு அநாதியாதலால் அதுவே ஸௌஹார்த்த மென்றதற்கு நிமித்த

மாம். ஆக இவ்வளவும், அநாதியான பிரகிருதி ஸம்பந்தங் காரணமாக அவிஞ்சை யுண்டாகி, அஃது அடியாகப் புண்ணிய பாப கருமங்கள் விளைந்து, அவை மூலமாகப் பிறப்பு நேர்ந்து, அது அடியாக ரஜஸ்தமோ குணப்பற்று உண்டாகி, அதனால் ஐம்பொருளுணர்வு இல்லையாக, துன்ப வெல்லையான ஸம்ஸார துக்கம் வரும்; அநாதியான பகவத் ஸம்பந்த மடியாக அவனது ஸௌஹார்த்த முண்டாக, அஃதடியாக அருள்பெருக, அது மூலமாக விசேஷ கடாக்ஷம் விளைய, அதனால் ஸத்வகுணம் நிரம்ப அதன் வழியே ஐம்பொருளுணர்வு உண்டாகி அதனால்இன்பவெல்லையான மோக்ஷஸுகம்வருமென்று சொல்லிற்றாயிற்று.

(தொடரும்)

ஷேக்ஸ்ப்பியர் நாடகக் காட்சித் திரட்டு

I ஜான் அரசர்

ஆங்கில கவிவாணர்களுள் மிகவும் சிறந்தவராகக் கொண்டாடப்படுபவர் ஷேக்ஸ்ப்பியர், உலகத்தின்கண்விளங்கியபெரியகவிவாணர்களில்ஒருவர் இவர். இவருடையநாடகங்களிற்சில, கலாநிலயத்தில்மொழி பெயர்க்கப்பட்டு வருவதால் இவரைப் பற்றியும், இவரது உயர்வைப் பற்றியும் நாம் எழுதவேண்டியதில்லை. இவர் எழுதிய நாடகங்கள் முப்பத்தேழு. அவற்றுள், முக்கியமானவைகளிற் சிறந்தனவாக எண்ணப்படும் பகுதிகளைமட்டும் இங்கே மொழிபெயர்த்துக் காட்டுவோம்.

'ஜான் அரசர்' என்னும் நாடகம் சரித்திர சம்பந்தமானது. அதன் கதையை அறிந்துகொள்ளுமுன், ஆங்கில நாட்டின் சரித்திரத்தை ஒருவாறு தெரிந்துகொள்ளுதல் வேண்டும். ஆங்கில நாடு தனித் தீவு. அது இங்கிலீஷ் சானல் என்னும் கடலினால் பிராஞ்சு நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றது. கி. பி. 1066 ஆம் ஆண்டில் பிரஞ்சுக்காரர் இங்கிலாந்து தேசத்தைவென்று அந் நாட்டின்கண் குடியேறினர்கள். அன்னவர்கள் பிராஞ்சுநாட்டின் ஒரு பகுதியாகிய நார்மண்டி என்னும் ஊரிலிரிந்து வந்தவர்களாதலால், நார்மன்ஸ் என்று அழைக்கப்பட்டார்கள். நூற்றைம்பது ஆண்டுகளுக்குள், இவ்வகுப்பார் இங்கிலாந்து முழுவதையும் கைப்பற்றினதேயன்றி, பிரெஞ்சுநாட்டிற் பெரும்பகுதிக்கும் அரசராயினர்.

இக்கதை தொடங்கும் காலத்திற்குச் சற்றுமுன்பு, இங்கிலாந்திற்கு அரசனாயிருந்தவன் இரண்டாவது ஹென்றி. அவனுக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் தன் தந்தையிடம் சண்டையிட்டு விலகினானேனும், இறுதியில் தன் குற்றத்தை யுணர்ந்து மனந்திரும்பி இறந்தான். அவனுக்கு இளையவன் ரிச்சர்ட். உயர்ந்த உருவமும், அழகிய முகமும், வியக்கத்தக்க வீரமும் பொருந்தியவன். கிறிஸ்து பிறந்த நாடாகிய பலஸ்தீனாவை மகம்மதியர் கைப்பற்றினரென்று, அதை அவர்களிடமிருந்து மீட்கும்படி அந்நாட்டிற்குப் படைகளைத் திரட்டிச் சென்று போர்புரிந்தவன். இதனால் இவன் இங்கிலாந்தில் தங்காமற் போக நேர்ந்தது. குடிகளுக்கு இவனது வீரச் செய்கையில் வியப்பிருந்ததேயன்றி, அரசனிடம் அன்பில்லாமற் போய்விட்டது. மூன்றாவது பிள்ளை ஜெப்ரி என்பவன். அவன் ஆர்தர் என்னும் சிறு பிள்ளை ஒருவனை விட்டுத் தன் தகப்பனுக்கு முன்பே இறந்து போனான். கடைசி பிள்ளை ஜான். இவனுக்கு இவன் தகப்பனுக்கிருந்த நல்லறிவும், வல்லமையும் வாய்க்கவில்லை. குடிகளின் நன்மையைக் கருதாது மனம்சென்றவழியும், புலன்கள் புகுந்தவாறும், தன் காலத்தைக் கழித்தான். தன் மூத்தோனை ரிச்சர்டுக்கு இவனிழைத்த துரோகங்கள் பல. ரிச்சர்ட் இறந்தபோது, அவன்பின்னவனான ஜெப்ரியின் பிள்ளைதான் அரசனாவதுமுறை. ஆயினும் அக்காலத்தில் ஆர்தர் இளையவனாயும், போரே தொழிலாய்க் கொண்ட பிரதானிகளை அடக்கியாளும் வல்லமை அற்றவனாயும் இருந்தபடியால் அவனை அரசனாய் ஏற்றுக்கொள்ள எவரும் விரும்பவில்லை. அதனால் ஜானே அரசனாகி நாட்டைக் கைப்பற்றினான். தனக்கு என்றும் போட்டியாய் இருக்கக் கூடிய ஆர்தரைச் சிறையிலடைத்துக் கொலையும் செய்வித்தான். இவனுடைய ஆளுகையில், பிரெஞ்சுநாடு முழுவதும் இழந்துவிடப்பட்டது. பிரெஞ்சு அரசனாகிய பிலிப் ஆர்தருக்காகச் சண்டையிடுவதாய் முன்வந்து, ஆங்கில அரசர்களுக்கிருந்த ஊர்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டான். பின்னும், போப் பென்னும் காதோலிக் கிறிஸ்தவமதத் தலைவருக்கும், அரசனுக்கும் முரண்பாடு உண்டாக, போப் இவனை மதத்தை விட்டு விலக்கி இவனை மகுடபங்கம் செய்யும்படி பிலிப்புக்கும் கட்டளை இட்டான். இடவே, அரசன் அஞ்சினவனாய்ப்போப்புக்குக் கீழ்ப்படிந்து, தன்மகுடத்தைப் போப்பின் தூதனிடம் கொடுத்து, அவனிடமிருந்து அவன் தர, அதைத் தான் ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்லிப் பெற்றுக்கொண்டான்.

இவ்வகையில், அயல்நாட்டுப் படையெடுப்பினச்சம் நீங்கிய பின், ஜானுக்குச் செங்கோல் வரம்புகெட்டது. குடிகளை ஆதரிக்க மறந்தான். அவரது குறைகளுக்குக் காதுகொடுக்கவில்லை. வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யாது, குடிகளின் மனுக்களைப் புறக்கணித்தான். இவனது தீச் செயல்களைக் கண்ட குடிகள், மனம் பொறாது, இவனை எதிர்க்கத் தலைப்பட்டு, அயல்நாட்டு அரசனை பிலிப்பை இங்கிலாந்துக்கு அழைத்தார்கள். தனக்குற்ற பகைவரை யழிக்க மண்டுகம் அழைக்க வந்த பாம்பெனப் பிரெஞ்சு அரசன் தன்சேனையுடன் ஆங்கில நாட்டைப் படையெடுக்கத் தொடங்கினான். இதனிடையே ஜான் அரசனும் மிதமற்ற குடியினாலும், மீதூண்விருப்பினாலும் நோயுற்று உயிர்துறந்தான்.

(தொடரும்)

அறிக்கை :—இந்த இதழைக் கண்டவுடன் 1934-ஆவது ஆண்டுச் சந்தா செலுத்தவேண்டியிருக்கிற நண்பர்கள் அனைவரும் தம் சந்தாவை மறு தபாலில் மணியார்டர் மூலமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இல்லையேல் அடுத்த இதழ் வி. பி. யில் அனுப்பப்படும். அந்தச் செலவும் சிரமமும் இல்லாமல் மணியார்டரில் அனுப்பி வைப்பவர்களுக்கு மிக்க நன்றியுடையவராக இருப்போம். மானேஜர்.

அ ப் ப ர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும் 31—இதிகாசம்

[6-வது வால்யூம், 891-வது பக்கத் தொடர்ச்சி]

ஆரியமொழியில், நீதிகளைப்போதிப்பதற்கும்நான்காம் வருணத்தாருக்குப் பெரும்பாலும் பயன்படுமாறும் இனியகதைகளாய்இயற்றப்பெற்றபெருங்காப்பியவிலக்கணமமைந்தசரித்திரங்கள்மூன்றுள-கந்தன்சரிதை, இராமன்சரிதை, கௌரவபாண்டவர்சரிதையான அம்மூன்றுமே இதிகாசங்களென்று எண்ணப்படுகின்றன. அவற்றை முதல்நூல்களாகக் கொண்டு தமிழிலும் இச்சரித்திரங்கள் எழுதப்பட்டிருப்பினும், அவையாவும்அப்பர்காலத்திற்குப் பின்னுல்வந்தனவேயாதலால் அவர்காலத்தில்வடமொழியிலேயே கற்கப்பட்டனவென்றே நாம்எண்ணல் வேண்டும்.நமது சமயகுரவர் தமிழில் எவ்வளவு சிறந்தபுலவர்ளோ, அவ்வாறே அவர் ஆரியத்திலுஞ் சிறந்தவர். ஆதலால் "வேதமுடனாகம புராணமிதிகாச" முதலான கலைகளின் சாரங்களை அவர் பாடல்களில் குறிப்பிடுவார். ஏனையோர் நூல்களினும், அப்பர் தேவாரம், இதிகாசங்களின் முக்கியபாகங்களை நன்கு விளக்குகின்றது.

இதிகாசங்கள் மூன்றுளனக் கண்டோம்-அவை முறையே நமது சதுர்யுகத்தில் முதல்யுகமாகிய கிரேதாயுக சரிதையான கந்தன் சரிதை, இரண்டாம் யுகமாகிய திரேதாயுகத்தின் சரிதையான இராமன்சரிதை, மூன்றும் யுகமாகிய துவாபரயுகத்தின் சரிதையான கிருஷ்ண சம்பந்தம் நீங்காத பாரதசரிதை என்னும் மூன்றும் ஒரே நீதியைப் பலமுகங்களிலும் விளக்கும். அதாவது, அக்கிரமம் எவ்வளவு சக்திபெற்றாலும், அது யாவராலும் அழியாதென்னவே விளங்கினாலும், பரம்பொருள் அதை வேரோடு களைவதற்குவேண்டியவாறு உருவெடுத்து அதையொழித்துத் தருமத்தை நிலைநாட்டுவாரென்றும், ஒருமுறை களைபறித்த நிலத்திலும் மறுபடியும் களைகள் வளர்ந்து அடர்வதுசாதாரணமாதல்போல், யுகங்கள்தோறும் உலகத்தில் தீவினைத் திரட்சி நேர்வதும் ஆக, அதையொழிக்கமேலும் மேலும் அவதாரபுருடர் வருவாரென்பதும் இதிகாசக்கதைகளால் நாம் அறியலாம். இதிகாசங்களில் கந்தன்காதையானது தமிழ்மக்களுக்கு உரியதும் தென்மொழியினின்று வடமொழிக்குச் சென்றதுமாம். மற்றைய விரண்டில் இராமனுடைய காதை, தென்னாட்டிற்கு உரியவனும், நவவியாகரண பண்டிதனும், இருமொழியின் சகலகலைகளிலும் வல்லனுமாகிய இராவணன், ஒரே குற்றத்தால் அழிந்தமை விளக்கும். இராவணன் பிறனொருவன் தாரத்தின்மீது இச்சை வைத்து மாண்டதுபோல், பிறன்பொருளை இச்சித்து அழிந்தோன் சுயோதனன்என்பதைப் பாரதம் விளக்கும். இம்மூன்றிற்கும் முக்கிய தருமவிளக்கம் ஒன்றாயினும், பலவகைத் தருமங்களை இடை இடையே இவை போதித்து உலகவாழ்க்கையில் மனிதர்நடையைச் சீர்திருத்த இதிகாசங்கள் முயலுகின்றன.கிரேதாகயுகத்தில் தருமதேவதை நான்கு பாதங்களுடன் நடந்ததால், ஏக பாதத்தில் நடக்கும் இக்காலத்தில் அக்காலக் குற்றம் ஒரு குற்றமாய்த் தோன்றாது. சூரபதுமன் தேவர்களைச் சிறையிலிட்டதும் எல்லா அண்டங்களையும் தன்வசமாக்கியதும் அத்துணைப் பெரிய குற்றமாகி, முருகக்கடவுள் அவதரித்துச் சூரபதுமாதியரைச் சம்மாரஞ்செய்தது, ஏனையயுகங்களாயின் சற்றுப் பராமரிக்கையே செய்யப்படும்.சீதையை விட்டிருப்பின், இராவணனுக்குத் தீங்கேசம்பவித்திராது. ஆயினும் சூரபதுமன் தேவர்களைச் சிறையினின்று விட்டிருப்பின், அத்துடன் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உள்ள விரோதமும் யுத்தமும் நிற்காவென்பது திண்ணம்.ஒருவகைநோக்கில் சூரன் தேவர்களைச் சிறையினின்று விடேனென்றது, அவன் அரசுக்கு ஒழுங்கீனமாகக் காணப்படவில்லை. ஆயினும் தருமம் சற்றேனும் வழுவாமல் நடக்கவேண்டிய யுகமாதலால் அவன் குற்றத்தைக் கண்டிப்பதற்குப் பரம்பொருள் அவதரித்தது நீதிக்குப்பொருந்தாமையன்று.எனவே யுகதருமவொழுங்கில் இவ்விதிகாசங்களை நாம் ஆராயப் புகுவோம்.

சூ ளா ம ணி

சிறுகாப்பியம் ஐந்தனுள் ஒன்றாய்விளங்குவதும் தோலாமொழித்தேவரால் பாடப்பெற்றதுமாகிய சூளாமணி என்னுமிவ் வழகிய நூலிற்கு, யாமறிந்தவரையில், இதுகாறும் யாரும் உரைவரைந்திலர். மூலம் மாத்திரம் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களால் அச்சாகியதேனும் அப்புத்தகம் இப்பொழுது கிடைப்ப தரிது. ஆதலின், 1931-வது ஆண்டு கலாநிலய இதழ்களில் உரையுடன் பதிப்பிக்கத் துவக்கிய இந்நூலின் 450 செய்யுள்கள் வரைந்து முடிந்தன. அதற்குமேல் இனி இந்நூல் உரையுடன் வரையப்பெறும். இரண்டு வருடங்கள் இடையீடிட்டு, மீண்டும், முன் விட்ட இடத்திலிருந்து துவக்கப்பெறுகின்றதாதலின், இதனின்று படிக்க நேர்கின்றவர்க்கு உதவும்படி, முன் எழுதி முடிந்திருக்கின்ற செய்யுள்களில் அடங்கிய விடயத்தை முதலில் சுருக்கமாகக் கூறிப் பிறகு அதற்கு மேல் தொடர்கின்ற செய்யுள்கள் உரையுடன் எழுதப்பெறலாகும்.

ஆசிரியர்

வென்றான் வினையின் தொகையா கிவிரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வி னொழியாது முற்றும்
சென்றேன் திகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

துளங்காதுயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியாய்நின்ற திவிட்டன் என்பவன் ஓர் அரசர்க்கரசன்; திருமாலின் பிறப்பாக வந்துதோன்றினேன்.மஞ்சுதவழும் கோடிக்குன்றம்என்னும்மலையினைமுன்னொருகாலத்தே பறித்தெடுத்த பெரியோன் இவன் வீற்றிருப்பது போதனம் என்னும் அழகிய நகரம்.சுரமை (ஸுரம்ய) நாடே அம்மாநகர் இருத்தற்கு இடமாயது. போயும் வந்தும் சென்று திரிந்தும் செல்வம் எனப் பெயர்பெற்ற பொருளெல்லாம் தங்குவதற்கோர் இடங்கொண்டு உயர்வது அந்நாடேயாம்.விஞ்சையர் நாட்டின்கண் ஒவ்வோர் வீட்டிலும் சிறப்புப் பெருக அந்நாடு முழுவதும் ஒரு பெருந் திருவிழா

வைக் கொண்டாடுங் கால முண்டாயின் அப்போது தான் சுரமைநாட்டை விஞ்சையர்நாடு ஒவ்வுமென்பர் உணர்விற் சிறந்த பெரியார்.

[அரசனோடு பிணைத்து இச்சுரமைநாட்டினைச்சிறப்பித்த தோலாமொழித் தேவர், மேலே, அதனைப் பெண்களோடு இணைத்து இயைபுபடுத்தி மேனோக்காகப் புனைந்துரைக்கின்றார். மங்கையர்தாம் பெய்யெனப் பெய்யும் மழையன்றோ நாட்டை நாடாக்குவது]

அந்நாடெங்கும் தாமரை காடாகப் பூத்திருந்தது. அதனருகே மதர்த்த செங்கயல் மீன்கள் கூட்டங் கூட்டமாகக் குதித்துத் திரிந்தன. இதற்கெதிர் கண்ணாடி பிடித்ததுபோல், பெண்களின் திருமுகத்திலே, மதர்த்துத்திகழ்ந்த ஒளியோடு விளங்கிச் செவ்வரிகருவரி படர்ந்த அழகிய கண்களும் விட்டுவிட்டொளிர்ந்தன. இவ்வண்ணம் இயற்கைவளமும் மக்கட்செல்வமும் எந்நாளும் நீங்காமல் அந்நாட்டில் இன்பக்கூத் தாடிநின்றன.

நீர்வளமிருந்த அச்சுரமைநாட்டின் குளிர்ந்தவயல்கள், மங்கையர் என்ன ஒய்யாரமாக நடந்து திரியும் அன்னக்கூட்டங்களினின்று இனிய குரலோடெழும் மழலையே தமது ஒலியாகக்கொண்டு ஒலிசெய்யலாயின. மக்கள் குடியிருந்த ஊர்களோ, காதன் மிக்க மகளிரது மெல்லென்ற சிறிய அடிகளிற் கிடந்தும், உயர்நிலை பெற்றாற்போல் ஓங்கிச் செருக்கிய சிலம்பொலியின் ஒலியே தமது ஒலியாகக்கொண்டு ஒலித்தன. இன்பக்கூட்டத்திற்கேற்பச் சீராயெழுந்த இன்னொலி இவையேயாம்.

இவ்வின்னொலிக்கேற்ப இனிய பாடல்களும் அந்நாட்டில் எழுந்தது. அப்பாட்டரங்கம், மரங்களின் நிழலிலே, அவைகளே மேற்கட்டியாக, கீழே பொற்றாதுகள் பட்டுத்துணி விரித்தாற்போல் படிந்திருப்ப நறுந்தேன் இடை துளிப்ப,நிரம்பி விளங்கியது. அவ்வின்ப மன்றத்திலே அவற்றோடியைந்து கிளிகளும் பூவையும் இன்பத்துக்குப் போக்குவீடாய்ப் பாடி நனி மகிழ்ந்தன.

மக்கள் வாழ்கின்ற வீடுகளிலோ, இன்னிசை வண்டுகள், மாதரார் நறுநாற்றமும் நல்லிசையுந் தம்மை வலிப்ப வந்து, நறுந்தாதினைக் குடைந்து குடைந்து, இன்னிசைகேட்டு உவந்துஉறங்குமாம்.மாலைமுடித்த கூந்தல் மாதரார் தம் மழலைச்சொற்கொண்டு பாடிய பாட்டும் அதற்கிசைய மீட்டிய யாழொலியும் தழுவித் திகழ்வன மாளிகைகள்.

இவ்வின்பப் பாட்டோடு இன்பக் கூத்தும்இனிது நடக்குமிடத்தே உண்டாட்டமும் உண்டு. நீர்நிலைகளில் காவிமலர்களுங் குவளைமலர்களும் நெகிழ்ந்து பொழிந்த தேறலை யுண்டு வண்டுகள் மொய்த்தன. கலவைக்குழம்பு பூசிய மகளிர் தவவொழுக்கத்தே நின்ற தம் கணவன்மாரையும் மனங்கசிவித்துக் காமவிருந்தூட்டுவான் மதர்த்தோங்கிப்பொலிந்தனர்.கள்ளுண்டார் வண்டுகளேயுமாகக் காமக் கனியுண்டார் கடுந்தவம் மேற்கொண்டு இல்லறம் புகுந்தாருமேயாக உயர்நிலைபெற்றது அச் சுரமைநாடு. வாழ்க்கைநலனும்இயற்கைவனப்பும் இயைந்துஇந்நாட்டின்கண் திகழ்ந்தன.

க ம் ப ரா மா ய ண ம்

கிஷ்கிந்தாகாண்டம்—முன்னுரை.

[6-வது வால்யூம் 895-வது பக்கத் தொடர்ச்சி]

அறம் செய்த அறத்தினுல் அதனைக் காக்கவும், தீவினை செய்த தீவினையினுல் அதனை அழிக்கவும், ஆற்றல்சால் கோசலையின் ஆலிலைபன்ன திருவயிற்றில் தயரதன் திருமதலையாய் அவதரித்து, கூனியும் சிறிய கோத்தாயும் கொடுமைபோல் தனக்குச் செய்த உதவியால் திருநாடுநீர்ந்து, ஆண்டுஓர் பதின்மூன்று அடவியின்கண்நெடிதுகழித்த எம்பெருமான், பொதுமையறப் புரிகின்றஇப்புனிதநாடகத்தகவயின், ஆவியை, சனகன் பெற்ற அன்னத்தை, அமிழ்தின் வந்ததேவியைப் பிரிந்தபின்னர் அலமந்தயர்ந்த சிந்தையோடும் செய்கை திகைத்து உழைக்கின்ற செய்தியைச்செப்பி நனிசிறக்கின்றஇக் கிஷ்கிந்தா காண்டத்தில் வானரப் பெருமையும் கம்பர்தம் புலமைக்கு இலக்காயவோர் பாக்கியத்தைப் பெற்றது. தமிழின் புகழை யெல்லாந் தன்புகழ் ஆக்கிக்கொண்ட இப் புலவர்பெருமான் அமிழ்தினைச் சுவைசெய்தாரென்ன வான்மீகி முனிவர் தந்த இராமகதையை இனிமையுற உரைக்கின்ற நீர்மைதன்னை வாலியை இராமன்வதைக்கின்ற களத்தின்கண் செவ்விதிற் காணலாம். அரக்கர் ஓர் அழிவு செய்து கழிய அதற்குக் கொலையுண்ட வேறோர் இக் குரக்கினத்தரசின் குற்றங்கள்எவையேயாயினும், ஆவிபோம் வேளையில் அறிவுபெற்று,

புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே

[முப்புரங்களை எரித்த சிவபிரான் முதலினோர் எனக்குக் கொடுத்திருந்த நிகரற்ற வரங்களை உருவியழித்தும், பழுதற்ற வலிமைநிறைந்த என் மார்பு முழுவதும் துளைத்தும், என் உயிர் முழுவதையும் குடித்த உன் ஒரு அம்புதான் அல்லாமல் தனியே தருமம் என்பது வேறு ஒன்று இருக்கின்றதோ.]

எனத்தேர்ந்துரைத்த இவ்வாசகம் கம்பர் தம்நூலில் காட்டமுயல்கின்ற கடவுட்கருத்து அத்தனையும் தன்னுள் தழுவிக்கொண் டிருக்கின்றது. புறவொன்றின் பொருட்டாகத் தலைபுக்க சிபி அனைய பெருந்தகையாளர் மரபில் வளர்ந்த புகழிற் பூத்த தயாதன் அருந்தவத்தால் தந்த "ஆயிரம் இராமரும்நின்கேள் ஆக மாட்டார்" எனப் பரதனைப் புகழ்ந்தான்முன் குகன் என்பான் ஓர் வேட்டுவக் குரிசில். வாலியோ, இராமன்பால் வைத்த பக்தியால் ஆயிரம் பரதர் தனக்கொரு கேள் ஆகமாட்டார் என்னும்படி திகழ்கின்றான். இவ்வண்ணம் வாலியைப் பெருமையுற வகுத்த அக் கம்பர்தம் பெருமைக்கு அளவு எங்கே கண்டு எவ்வகை நாடி உரைசெய்வோம்.

தீவினை நயந்து செய்த ஒரு குரங்கெனக் கருதப்படும் வாலியையும் இவ்வண்ணம் உயர்த்தவல்லது கம்பர்தம் கவிதை. உத்தம கவிதையால் கைவரவேண்டிய பயனும் அதுவன்றி வேறில்லை. வாலியைச் "சிறியன சிந்தியாதான்" என்று கம்பர் ஓரிடத்தில் குறிக்கின்றார். கம்பர்தம் காவியத்துள் பயில்கின்ற நன்மை ... வனுக்கு அச் செம்மை வாய்த்தது. வீர ... ல்லாத நெறியில் தன்னை மறைந்து

m211, N28KW
N34.2.1
199151

நின்றுகொன்ற இராமனை அவ்வாலி பகைத்திலன், பழித்திலன். இக்காரியத்தால் இராமன் தன் புகழிற்கு ஓர் இழுக்கும், சூரியன் மரபிற்கு ஓர் மறுவும் ஆக்கினானே என்னும் பரிவேபற்றித் தன்னைக் கொன்றவன் பொருட்டே இரங்குகின்றான். வாலி வீரனாவது இந்த உயர்குணத்து உத்தம சிந்தையால் நேர்கின்றது. உயர்ந்த சிந்தனையுடைய வாலியின் வலிமையும் இவ்வண்மையிற்றானே அடங்கி யிருக்கின்றது. அமரருக்கு இவன் அமுதங் கடைந்து அளித்தநாள் தானும் அவ்வமுதத்தில் ஒரு துளி பருகலாம் என்ற எண்ணங் கூட எழுந்ததில்லை. இத்தகைய பெருமைகளை இவன் பால் கண்டு மகிழ்தற்கு, அவன் இழைத்த பிழைகளை மறக்க வேண்டுமென்பது அவசியமில்லை. வாலியும் பிறன்மனை கொண்டான், இராவணனும் அது செய்தனன். எனினும், சுயநயம் அற்ற பெருந்தகையாளன் வாலி, இராவணனோ தன்னையே சார்ந்த நினைவில் மூழ்கியவன். உடல்வலி தாம் பெற்றுள வரங்களின் ஆற்றல் முதலியவைகளில் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் குறைந்தவர்களல்லராயினும், வாழ்ந்த நாளில் தனக்கென முயலாதவனும், இறக்குந்தறுவாயிலும் தனக்கென இரங்காதவனும் ஆகிய வாலி, உயரிய சிந்தையால் விளைகின்ற வோர் ஊக்கத்தின் ஆற்றலும் உடையவனாதல்பற்றியே, இவ் வரக்கர்தலைவனைத் தன் வாலிற் கட்டி இழுக்கவல்லவனாயினன்.

இன்னதோர் வாலியைப் பற்றிய செய்திகளையே பெரிதும்தழுவிநிகழ்வது இந்தக் கிஷ்கிந்தாகாண்டம். குரக்கினத்துப் பெருமையின் அருமையில் அநுமனும் குறைந்தவனல்லனேனும், இந்தக் காண்டத்தில் களத்தினுள் இனிதின் வருகின்ற இவ்வநுமன்தன் திறமும் செம்மையும் இதற்கடுத்த சுந்திரகாண்டத்தின் கண்ணே வளர்கின்றன. வாலியோ தீமை புரிந்தனன். ஆயினும் அவனை நாம் பெருமையுடன் நினைக்கும்படி கம்பர் நிகழ்த்துகின்றார். இதனோடு, அவனது குற்றத்தைக் குணமெனக் கொண்டு மயங்கி நம் மனம் பழுதுறாமலும் காக்கின்றார். இறந்த வாலியைக் கண்டு இரங்குவதே யன்றி அவனைக் கொன்ற வீரன்பால் நாம்கோபம்கொள்வதில்லை. அவன் செய்தகுற்றங்கள் கிடக்க, அவைகளை யாதும் மறைக்காமலே, தன் குணங்களால் நமக்கு அருமையாகின்ற வாலியைக் கொல்விப்பதற்கு உதவியாயிருந்த அனுமனும், அதனால் நம் மதிப்பினில் பழுதுறாவகை கம்பர் செவ்விதின் காத்துவைக்கின்றனர். இவைகளுக்கிடையில் இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றதும் நீதியோ என்னும் கேள்வியொன்று நிரந்தரம் உளது. பண்டிதர்களோடு பாமரர்களும் இந்தப் பழைய வழக்கில் தமது கருத்தைச் செலுத்துவது இயற்கை. கொலை செய்தனனோ இராமன் அல்லது தான் மேற்கொண்ட தருமத்தை நிலைநிறுத்துவதற்கு இவ்வண்ணம் அவன் செய்யவேண்டுமென்பது இன்றியமையாததாயிற்றோ என்னவே ஒருபாற்படாமல் ஊசலாடுகின்ற உள்ளத்தினை ஒருநிலைக்குக் கொணர்ந்துவைக்கும் கம்பரது புலமை கரைசெயற்கரிய பெருமை வாய்ந்தது. யாருடைய குற்றத்தையும் நாம் குணமாகக் கொள்ளும்படி கம்பர் மயக்கவில்லை; ஆயினும் அக்குற்றம் ஒன்றுபற்றியே ஒருவருடைய ஏனைய பெருமைகளுக்கு நமது உள்ளத்தை உவந்து அளிக்க மறுக்கலாகா வகையும் புரிகின்றார். இந்தப் புலமையைக் கம்பர் எவ்வண்ணம் நிகழ்த்தி, எவ்வாற்றால் பயனுறச் செய்கின்றார் என்னும் இச் சுவைமிகு ஆராய்ச்சிக்கு இடமளித்து நிற்பது இக் கிஷ்கிந்தா காண்டம்.

இன்னவாறெலாம், கற்பனைத்திறமையிற் சிறந்த பாலகாண்டமும், நாடக முறைமையில் உயர்ந்த அயோத்தியா காண்டமும், அறிவினது நுட்பம் செறிந்த ஆரணிய காண்டமும் கடந்து நிரந்தரமான தத்துவத்தின் தன்மையை விளக்கவரும் கிஷ்கிந்தா காண்டத்தை எய்துகின்றோம். இவையனைத்தும் பொதுவுறப் பொலியும் புலமையின் அழகினால் மாத்திரமன்றித் தத்தமக்குரிய தனிச்சிறப்பினாலும்ஓதுவோர் தம்மெய் மறந்திருக்கும்படி செய்கின்றன. பற்பலவற்றை என்ஞான்றும்நினைந்து நினைந்துஉழலும்படி சொல்வாரும் செய்வாரும்எங்கும்கிடக்கின்றனர். மற்று, சிறிதுபோதேனும் நம்மை மெய்மறந் திருக்கும்படி செய்கின்ற சான்றோரே உயிர்வாழ்க்கையை உயர்த்தவல்ல உதவி புரிகின்ற உண்மை வள்ளல்களாவார். உடலினை உறங்கவைத்து நம் உணர்வினை மெல்லமெல்லக் கொண்டுபோ யழகின்பால் கலப்பதற்குரியசாதனங்களைக்கைக்கொள்வதே சாலப் பயனுடைத்து. இன்ன திறத்தில் கம்பர்தம் இராமாயணத்தைப் போன்றதோர் சீரிய சாதனம்காண்டலரிது. கம்பர் இயற்றிய இக்காவியம் சமயநூல் அன்று; வைணவச் சார்புடைய வாதமும் அன்று. கவிநய மெடுத்துக்காட்டும் கட்டுரைகளுக்கு நிலைக்களன் ஆகும்பொருட்டே பாடப்பெற்றதும் அன்று. கவிதையின் உவகையால் கம்பர்தம் கருத்தினின்று வளர்ந்தெழுந்த வோர் கற்பகத்தின் கற்பகமே இது என்னலாம். வேண்டினவர் வேண்டியதை மட்டுமல்லால் வேறென்ன நல்கவல்லது அப்பொன்னகர் இருந்த கற்பகத்தரு! நலனுற நம்மால் வேண்டற்பாலது எதுஎன்பதையோ அது கற்பிப்பதில்லையே. நயந்ததை எல்லாம் நல்குவது எப்பொழுதும் நல்லதே என்ற நியதியில்லை. நல்லனவேநயப்பதற்குரியபடி மனத்தினைத் திருத்திவைத்து, பிறகு அதற்கிணங்க, நயந்த நன்மையையும் நல்குவதுதான் உண்மையாய வண்மைத்திறம். கம்பர்பெருமான் இயற்றிய இம்மாபெருங்காப்பியம், மனிதருக்கு உதவும்பரிசு இத்தகைய வோர் புதுமையும் பெருமையும் வாய்ந்தது. உலகக் குழப்பத்தில்உழலாமல் கருணைச்சோதியாம் கடவுளினிணையடி நீழலைத்தானே நயக்கும்படி செய்து, அதனைப்பெறும்படியும் புரிகின்றதென்றால்இந் நூலினது மாட்சியை இயம்பவும்வேண்டுமோ. இந் நூலின் பயிற்சியும் நினைவும் இன்று இருப்பதனினும் அதிகமாகத் தமிழருக்கு வாய்க்குமாயின் உலகத்தின் நோக்கமும் போக்கும் மிக விரைவில் முற்றிலும் மாறி நேரான நெறியினை நண்ணலாகுமே.

கடவுளின் சித்தம் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை அறிய முயல்வோருக்குப் பேருதவியாக நிற்கவல்லது இக் கிஷ்கிந்தா காண்டம் என்னலாம். மனிதர் மிகமுயன்று எய்தவல்ல அறிவின் சிகரமெல்லாம் தாம்அறிய இயலாதென்பதை ஐயமறஅறிந்துகொள்வதே யாதலின், அவ் வறியஇயலாமையின் திறத்தினையே கம்பர்தம் இணையிலா நுண்ணியஅறிவினால் சாதிக்கின்றார். இழந்தசீதையைமீண்டும் அடையும்வகையில், இவ்வாலிவதை இராமனுக்கோ யாதும் பயனில்லை. இவனைக் கொன்று சுக்கிரீவனைத் துணைகொண்டது, சிங்கத்தைப்போக்கி ஓர் முயலைத் துணைப்

பற்றுகின்ற முயற்சியையே ஒக்கும். சுக்கிரீவனுக்குத்தான் இதனால் உண்மையான பயன் ஏதேனும் உண்டோவெனின், இராமபிரானது காட்சியும் கருணையும் வாய்த்தபின், இக்குரக்கினத்தரசுரிமையால் அவன்கொண்ட பொருள் என்ன பெருமைத்தாகும்? கையில் தந்த பொன்னைப் போக விட்டு மண்ணைக் கட்டித் தழுவிக்கொள்ளும் புன்மதியென இகழ்தற் குரியது அது. இவ்வண்ணம் ஒருவருக்கும் பயன்படாத ஒரு காரியத்தை இராமன் ஏன் செய்தான்? பயனைக் கருதிச் செய்திலனாயினும், அதருமத்தைத் தண்டித்துத் தருமத்தை நிலைநிறுத்துவதன் பொருட்டு இராகவன் இதனைத் துணிந்து செய்தானெனக் கொள்வது இயற்கையே. மற்றைய நூல்களில் இக்கொள்கைக்கு அமைகின்ற ஆதாரம் எவ்வகையினதேனும், எவ்வளவினதேனும், கம்பரது கருத்து அத்தகைய அமைதியதை நாடியதென்று நிச்சயமாக நினைக்க இயலவில்லை. தன்னைக்கொன்றது தருமம் அன்றென்ன வாலி வாதித்து, அவ்வாதத்தை இராமனும் ஒப்புக்கொள்ளும்படி கம்பர் அரிதின் நிகழ்த்துகின்றார். இவ்வண்ணம் இராகவன் வாலியை வதைத்தது ஒருவருக்கும் பயனற்றதாயினும், அதன் தருமமும் ஐயத்திற்கு இடமாயிருப்பினும், கம்பர் அதனை நிகழ்த்து முறைமையால் நம்மனோர்க்கு அளவிடற்கரிய பயனை அளிப்பதுடன் கடவுள் சித்தத்தைத் தெரிவிக்காமல் தெரிவிக்கின்ற ஆற்றலால், தருமத்தின் தன்மையைத் தெளிவிக்கின்றார். "வாலியைப் படுத்தாயலை மன்னறவேலியைப் படுத்தாய்" என்று அவ்வானரத் தலைவன் விளம்பியது உண்மையே. ஆயினும், மன்னறத்தினும் உயர்ந்ததாகிய வோர் கடவுட் சித்தத்தை நடத்துவதற்கு மன்னறவேலியைப் படுப்பதும் இன்றியமையாததாயிற்றுப் போலும்.

இன்னோரன்ன விடயங்களை ஆராய்வதற்கு இடந்தருவதால் இக் கிஷ்கிந்தா காண்டம் நனிமிகப் பயனும் பொருளும் சுவையும் உடையதாகிநிற்கின்றது. இறைவனருள் உண்டாயின் இதனை இரண்டு வருடங்களில் வரைந்து முடிப்போம்.

துன்பமும் இன்பமும்

"வையகமும் துயர் தீர்கவே" என்ற வாழ்த்து அனைவரும் அறிந்தவிஷயமே. ஆயினும், துன்பம் எப்படித் தீரும்; இன்பம் எப்படி எய்தும் என்ற ஆராய்ச்சியை நாம் செய்வதில்லை. அப்படிஆராய்ச்சிசெய்தாலும் ஏதேனும் ஒரு முதுமொழியைக் கூறியோ, அல்லது ஈசன் அருளால் கிடைக்கும் என்று பொதுவாகச்சொல்லியோ திருப்திஅடைவது வழக்கமாகஇருக்கிறது. துயரத்திலிருந்து நீங்கி இன்பத்தை அடைய நாம் பிடிவாத முயற்சிசெய்து தாமதம் இன்றிச் சுருங்கிய வழியாகச் செல்ல முடியுமா அல்லது படிப்படியாகப் போகவேணுமா என்றுநாம்விசாரிக்கவேணும். அப்படி விசாரிக்காமல்இருப்பதால் அலைகளால் மோதப்பட்ட கட்டையைப்போல் இன்ப துன்பங்களால் மோதப்பட்டு நம் வாழ்வை வீணாக்கிக் கொள்கின்றோம். இதைத் தான் மணிவாசகப் பெருமான்

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணிக்
கிடக்கின்றேன்" எனக் கூறினர். பொருள் இன்பத்திற்குச் சாதனமாகஇருப்பினும், துன்பம்கலந்தஇன்பத்தை அளிக்கின்றதே ஒழியத் தூய்மையாய இன்பத்தை அளிப்பதே இல்லை.

எனினும், பொருள் வேண்டாவென்றும் துறவியேயாகவேண்டுமென்றும் நினைப்பதும் சொல்லுவதும் உசிதமே இல்லை. நாகரிகமென்னவென்றால் புத்தி சாமர்த்தியத்தால் இயற்கையால் கிடைக்கும் பொருள்களைச்சேகரிப்பதும் நம்முடைய சுகத்திற்குச் சாதனங்களாக அவைகளை மருவச் செய்வதுமேயாகும். பொருள் என்றால் உணவுப்பொருள் மட்டுமல்ல, இன்பக் கருவிகளாக இருக்கும் இயற்கைப் பொருளோ அல்லது கைத்தொழில் மூலமாக அதனுடைய மாறுபாடான நிலையோ அவை எல்லாவற்றையும் பொருள் என்ற பொதுப்பெயர் குறிக்கும்.

உலகத்தில் மக்கள்எல்லோரும் பொருள்தான் இன்பத்திற்குச் சாதனம் என்று கருதுகின்றார்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை என்ற பழமொழி ஒரு வகையில் உண்மையே. ஆயினும் பொருளைத் தேடத் தொடங்கினால் போட்டி ஏற்பட்டுச் சண்டைகளும் சச்சரவுகளும் பெருகுகின்றன. பொருள் வேண்டும் என்று எல்லோரும் விரும்புவதால் காமமே குரோதமாக முடிகின்றது. காமம் வந்தாலே துயரம்; குரோதம் வந்தால் தீராத்துயரம்; பொருளைப் பங்கிட்டுக்கொள்வோமென்றால் பங்கிட்டால் அது குறைந்துபோகின்றது. பங்கு போடாவிட்டால் போட்டி, பங்கிட்டால் குறைவு.

ஆகையாலிப்பொழுது வழங்கிவரும் நம்முடைய கல்விமுறைகள் எந்தக்காரணத்தைக்கொண்டு முக்கியமாய்ப் பயனற்றதாகிறதென்றிகழ்ந்துபேசலாம்என்றால் அது நம்முடைய நுண்ணறிவையும்கற்பனாசக்தியையும் (Invention) தீட்டிக் கூராக்கவில்லை என்ற குறையே. நாம் மேனாட்டுப் பாஷையையும் பழக்கங்களையும் கற்றுக்கொண்டு நம்முடைய நடையுடைபாவனைகளையும் சுரூபத்தையும் இழந்து வறுமையில் உழன்றுகொண்டிருக்கிறோம். இங்கிலீஷ்ப்பாஷையில் பேசிவிட்டால் பெருமையை அடைந்துவிட்டதாக நம்முடைய மக்கள் எண்ணி மதிமோசம் போகிறார்கள். நம்முடைய நாட்டில் உள்ள பொருள்கள் வெளிநாட்டுக்குப் போய் அங்குள்ள கைத்தொழிற் சாலைகளில் உருவம்மாறி மறுபடியும் நம்முடைய நாட்டில் இறக்குமதியாகி நம்மிடத்தில் குறைந்துகொண்டே வரும் தனத்துக்கு வேரை அறுக்கும் கருவியாக நம்மிடமே வந்து சேருகின்றன.

இதை நான் முக்கியமாகக் கூற இவ்விடம் முன்வரவில்லை. என் நோக்கம் என்ன என்றால், பொருள்களால் உண்டாகும் துன்பங் கலந்த இன்பத்தை இகழாமலும் இழக்காமலும் அவைகளுக்காக வெளிநாடுகளையே நம்பித் தாய்நாட்டைப் பாழாக்காமற் காப்பதன்றியும், அவைகளைக்காட்டிலும் உயர்ந்த

ஒரு இன்பத்தினை நாம் நாடவேண்டும் என்பதே. அந்த உயர்ந்த இன்பம் கலைகளின் (art) மூலமாகத் தான் வரும்; அந்த இன்பம் காமத்தால் வரக்கூடிய தில்லை; காமத்தை அதிகப்படுத்துந் தன்மை யுள்ளதும் அன்று. அது உள்ள இடத்தில் காமத்துக்கே இடமில்லை என்றால் கோபத்திற்கு இடம் எப்படி இருக்கும்! அமைதி நிரம்பி இருந்தால்தான் அலையின் அசைவற்ற ஏரியில் பூர்ணசந்திரன் விளங்குவது போல் அந்த இன்பம் நம்முடைய மனத்தில் விளங்கும். அந்தஇன்பம் பங்கிட்டால் குறைபாது. ஆனால் மற்றவர்க்கு அளிக்காமல் பொறாமையாலோ துவேஷத்தாலோ உலோபத்தனத்தாலோ ஒளித்து வைக்க வைக்க அது ஒளிகுன்றி மழுங்கிக் கெட்டுப்போகும்.

நம்முடையநாட்டில் எல்லோருக்கும் பிரம்மானந்தமென்றால் அதில் மயக்கம்அதிகம். ஆயினும், கலையினது இன்பத்தை உணரவும்உணர்த்தவும்தேர்ச்சியில்லாத மனது பிர்ம்மானந்தமான கைலாசத்தின் உச்சியில் எப்படி நிற்கமுடியும்? எந்த நாட்டில் நாகரிகத்தின் மூலகாரணமான பொருள்மிகுதியை(surplus) அடிப்படையாக கொண்டு கலாஞானம் செழித்தோங்கி வளர்கின்றதோ அந்த நாட்டில் பிரம்மஞ்ஞானந்தமும் கரைபுரண்டு ததும்பி இருக்கும். நம்முடைய நாட்டில் விக்கிரமாதித்யன் அரசாட்சி செய்த காலத்தில் காளிதாசனும் அதன் பிறகு சங்கராசாரியரும் நம்முடைய நாட்டுக்கு நிகரும் அழிவும் இல்லாத புகழைஅளிக்கவில்லையா? அதற்குமுன் பாண்டவர்கள் காலத்தில் வியாஸர் அளித்த கலாஞான விருத்திக்கும் பிரம்மஞான விருத்திக்கும் எல்லையுண்டா? இன்னும் முன்பாக இராமராஜ்யத்தில் வால்மீகி ராமாயணமும் யோகவாசிஷ்டமும் உண்டாக வில்லையா?

தாம் அருமையாகஇயற்றிய சாகித்ய தர்ப்பணம்என்னும் நூலில் விச்வநாதர் என்பவர் கலானந்தத்தைப் பிரம்மஞான சகோதரன் என்று வர்ணித்திருக்கிறார். நாம் லக்ஷ்மணருடைய அனுக்கிரகம் பெற்றுத்தான் ராமரிடம்போகவேணும். ஆங்கிலத்தில்ஷெல்லி(Shel-ly)என்ற மகாகவி அன்பையும் கவியின்கற்பனைசக்தியையும் பின்வருமாறு ஒப்பிட்டு வர்ணிக்கின்றார்.

“True love in this differs from gold and clay
That to divide is not to take away.
Love is like understanding, that grows bright
Gazing on many truths, this life they light,
Imagination which from the earth and sky,
And from the depths of human fantasy,
As from a thousand prisms and mirrors, fills
The universe with glorious beams, and kills
Error, the worm, with many a sun-like arrow
Of its reverberated lightning.”

ஆகையால், கலா ஞானமும் கலானந்தமும் நம்முடையநாட்டில் ஆண் பெண் என்ற பாகுபாடில்லாமல், ஏழை தனிகன் என்ற வேற்றுமையின்றி, பண்டித பாமரர்கள் அடங்கலாக யாவருக்கும் பரவும்படி செய்வதே கருதி இக் கலாநிலயம் உழைத்து வருவது எல்லோராலும் பாராட்டத் தகுந்ததே.

மதுரைக் கோவை

முன்னுரை

இந்நூல் இதுகாறும் அச்சிடப்பெறாத பழைய கோவைகளுள் ஒன்று. இதன்கண் உள்ள செய்யுட்களிலே ஒரு சில ஸ்ரீ வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்க வுரையில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. (இலக்கண விளக்கம் பக். 399, 417, 419, 422, 500 பார்க்க) தேசிகரது காலம் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன்பாகலின், இந்நூ லியற்றப்பெற்றுச் சுமார் 400 வருடங்களாகி யிருக்கலாம். இதனைக் கூடற்கோவை யெனவும் வழங்குவதுண்டு.

இந்நூலினை யியற்றிய ஆசிரியர் வேம்பத்தூர் என்னும் நிம்பையில் வாழ்ந்தவரென்பதும் சங்கரநாரணன் என்னும் இயற்பெயரின ரென்பதும் சிறப்புப்பாயிரத்தால் விளங்குகின்றன. இவற்றைப்பற்றி வேறு யாதும் அறியக்கூடவில்லை.

S. வையாபுரிப் பிள்ளை.

சிறப்புப்பாயிரம்

தேவுக் கரசு திருவால வாய்க்கொரு
தீபமென்னும்
கோவுக் கருந்தமிழ்க் கோவைசெய் தான்கொண்
டெழுமொருசொற்
காவிற் படிதடஞ் சூழ்நிம்பை காவலன்
கற்றுணர்ந்தோர்
நாவுக் கினியனன் சொற்பாடற் சங்கர
நாரணனே.

காப்பு

அடிக்குந் தொடைக்கு மடங்காத கோவை
யலங்கலந்தை
முடிக்கும் படிவந்தென் முன்னின்ற வாசங்க
முத்தமிழ்நூல்.
வடிக்குங் கடவுள் மதுரேசர் கோபுர
வாயினின்று
நடிக்குங் கடாசலந் தூக்கிய தாமரை
நாண்மலரே. 1.

வாழ்த்து

மறைவாழி யெங்கள் மதுரைப் பிரானடி
வாழிசைவத்
துறைவாழி தானத் தொகையவர் வாழி
துழனிவிழா
நறைவாழி யேடெதி ருந்நதி வாழியந்
நாடளிக்கு
மிறைவாழி மூவ ரியல்வாழி வாழி
யிருநிலமே. 2.

குமரன் றுணை: ஞானதேசிகன் றுணை.

நூல்

காட்சி

கார்பூத்த சிந்துர வார்பிறை சூடுங்
கமலம்பண்டு
பார்பூத்த மின்னென்று பூத்ததுண் டோபணைத்
துப்பெருத்து
வார்பூத்த கோல முலையுமை பாகர்
மதுரைவைகை
நீர்பூப்ப தன்றியுங் கண்டனங் காவி
னிலைபெறவே. 3.

ஐயம்

காழ்பட்ட கண்டர் கடம்பா டவிநின்ற
கன்னியிடம்
ஊழ்பட்ட தெண்டிரை யோவரை யோபொன்
னுலகுமற்றோ
வீழ்பட்ட தாமரை யோவிவர் தாமிங்கு
மேவவங்குப்
பாழ்பட்ட தெவ்விட மவ்விடம் யாதென்று
பார்த்திலமே. 4.

தெளிதல்

ஆளிற் றமியரை யாளால வாய
ரணிவரைமான்
றாளிற் புறநின்று தாழுநெஞ் சேகுழை
தாவிவடி
வாளிற் சிறந்த விழியுந்தண் டாரு
மதிப்பதொன்றோ
தோளிற் கரும்பருந் துங்கரும் பாகத்
துணிவித்ததே. 5.

வியத்தல்

புடைகொண்ட வல்குற் பரப்புஞ்சந் தாடு
பொருப்புங்கண்டிங்
கிடைகண் டிலமென் றிரங்குநெஞ் சேவெள்
ளெருக்கிதழிற்
தொடைகொண்ட செஞ்சடை யார்சொக்கர்
தாளைத் தொழுதகற்பக்
கடைகண் டவனென்று கண்டல்ல வோவொன்று
காண்பதுவே. 6.

புணர்ச்சி துணிதல்

சுணங்கா ரிளமுலைத் தோகைபங் காகிய
சொக்கர்வெற்பி
லிணங்கா திதுநமக் கென்னுநெஞ் சேதிரு
வென்பவர்தங்
கணங்காத லிக்குமிக் காரிகை பாலன்பு
கந்திருவ
மணங்காண் மணங்க ளனைத்துமொவ் வாதிம்
மணந்தனக்கே. 7.

குறிப்பறிதல்

பெண்பாற் படும்வந்தி பிட்டா லகிலம்
பிரம்புபட
மண்பாற் சுமந்துநிற் பார்மது ரேசர்முன்
வாதுவென்ற
பண்பார்த்த சொல்லி பராமுகப் பார்வையிற்
பார்த்தகடைக்
கண்பார்க் கிலைநெஞ்ச மேயதி லேயுண்டு
காதலுமே. 8.

கலந்துழிமகிழ்தல்.

குலமுத் தமிழ்தெரி வார்சொக்கர் கூடலிற்
கூடியிந்த
நலமிப் படிபின்னை யார்பெறு வாரின்ப
நாயகியைப்
புலவிக் களவு படாப்பெரும் போக
புரந்தரையைக்
கலவிக் கனியையின் கோது படாத
கரும்பினையே. 9.

தெய்வத்தை வியத்தல்

சேரித் தமருந் தனதாய வெள்ளமுஞ்
சேரவிட்டிங்
காரித் தனிவந் தெதிர்ப்படு வாரால
வாயற்கன்பு
பூரித்த நன்னெஞ்ச மேயெமக் காகவிப்
பூங்கொடியைப்
பாரித்த தெய்வமன் றோதெய்வ மாகவும்
பாவிப்பதே. 10.

கிளவி விரும்பல்

கொல்லிற் சிறந்தறி யாதடு சூலத்தார்
கூடலன்னார்
சொல்லிற் கவாநின்று சோருநெஞ் சேதுணைத்
தோளொருகாற்
புல்லிக் குழைந்தது கண்டா லினிநம்
புதுமொழியின்
வல்லிக் கிவனுள்ள மென்படு மோவென்று
வஞ்சித்ததே. 11.

இருவயி னொத்தல்

சினைச்சங் கிளமணற் குன்றேறி வைகைத்
திரைதவழ்ந்து
மனைத்தண் டரளஞ் சொரிமது ரேசர்
வரையிலிந்த
நனைக்கொந் தளவல்லி நன்பால் விழித்த
நலத்தைநெஞ்சில்
நினைக்குந் தொறுமது செந்தமிழ்ப் பாடல்
நினைவொக்குமே. 12.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு “சத்வைத்யசாலை” மருந்துகள்
“ஆல்மண்டைன்” (டானிக்). “பாலக்ஸ்” பேதிமாத்திரை. “ஸ்ப்ளீவரால்” (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
I.D.L. ச்யாவனப்ராசா
I.D.L. பிருங்காமலக தைலம்
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பெல்போட்
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199151

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

அம்பெய்யும் பெண்கள்:— டோக்கியோ, மெய்ஜீ ஷிரைன் ஸ்டேடியத்தில் நடந்த விளையாட்டுப் போட்டிப் பந்தயக் காட்சியில் உயர்தரப் பெண் பாடசாலை மாணவிகளின் வில் வித்தைப் போட்டி நடந்தபோது பெண்கள் வில் வித்தையில் பெரிதும் திறமை காட்டினார்கள். இந்தப் போட்டிக்கு ஜப்பான் இராஜ்யத்தின் பல்வேறு இடங்களிலிருந்து பல சமர்த்துள்ள பெண்மணிகள் வந்திருந்தனராம்.

*　　*　　*

விவாகரத்து:— புடாபெஸ்ட் வாசியாகிய அலடார் படாக்கி என்பவர் தனது மனைவி நாளுக்குநாள் உணவைக் குறைத்து 28 ராத்தல் நிறையிற் குறைந்தது காரணமாக அவளுக்கும் தனக்கும் இடையிலுள்ள விவாக ஒப்பந்தத்தை நீக்கும்படி வழக்குத் தொடர்ந்தார். நீதிபதி தனது மனைவியின் தேக நிறையைக் கட்டுப்படுத்தப் புருஷனுக்கு உரிமையுண்டு எனக்கூறி விவாக ஒப்பந்தத்தை நீக்கிவிட்டாராம்.

*　　*　　*

துருக்கிப் பிச்சைக்காரர்:— இஸ்தம்பூலில் பிச்சைக்காரர்கள் மணிக்கு 4 ஷில்லிங் விகிதம் சம்பாதிக்கின்றனர் என்பதை ஸர்க்கார் அதிகாரி ஒருவர் பிச்சைக்காரர் வேடம் தரித்துப் பல மாதங்கள் பிச்சைக்காரராக இருந்ததின்மூலம் கண்டுபிடித்துவிட்டார்.

*　　*　　*

மூவர் பிரசவம்:— போலந்து நாட்டில் குருஸைனு என்னும் கிராமத்தில் 58 வயது சென்ற ஒருஸ்திரீயும், அவள் மகளும், அவள் பேத்தியும் ஆக மூன்று பேரும் ஒரே இரவில் பிள்ளைகளைப் பெற்றனர். முதலில் 17 வயதான பேத்திக்குப் பிரசவம் ஏற்பட, பிறகு அவள் தாய்க்கும் பாட்டிக்கும் முறையே பிள்ளைகள் பிறந்தன. மூன்றும் ஆண் பிள்ளைகளே.

*　　*　　*

கோடீஸ்வரியின் கலக்கம்:— அமெரிக்காவில் கன்னி டோரிஸ் ட்யூக் என்னும் பெண் புகையிலைக் கோடீச்வரியென்று பேர் பெற்றவள். அவள் ஆஸ்தியின் மதிப்பு எண்பது லட்சம் பொன்னும். அவளைக் கொலைசெய்துவிடுவதாயும், தூக்கிக்கொண்டு போய்விடுவதாயும் அடிக்கடி கடிதங்கள் வருவதால் அவள் அஞ்சி நடுங்கி நியூ ஜெர்ஸியிலுள்ள தனது மாளிகையிலேயே போலீஸ் காவலில் வாழ்ந்துவருகிறாளாம்.

*　　*　　*

காதலிகளின் தொல்லையை நீக்கிய வழி:— ஜப்பான்தேசத் தலைநகரான டொக்கியோவில் உள்ள ஒரு சுரங்கத் தொழிலாளிக்கு இரு மனைவியர் இருந்தனர். அவர்கள் இருவரும் ஒருவர்க் கொருவர் பொறாமை கொண்டு தமது கணவனை வருத்துவாராயினர். அவன் அவர்கள் இருவர் பிணக்கையும் தீர்ப்பதாகச் சொல்லி ஓர் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான். அங்கே பெண்கள் இருவரும் உட்கார, தொழிலாளி நடுவில் உட்கார்ந்து மேஜையில் வெடிகுண்டு ஒன்றை எறிந்தான். அது வெடிக்க மூவரும் உடனே மரணமெய்தினர்.

*　　*　　*

சாவுக்குப் பின் மூளையின் நிலை:— மானிட உடலை விட்டு உயிர் நீங்கினாலும் மூளையில் உயிர் அநேக நிமிஷங்கள்வரை நீடித்து நின்று பாதைகளை உணருகிறதென்று டாக்டர் செர்ஜ் வொரோனுப் கூறுகிறார். ஒரு குற்றவாளி சிரச்சேதம் செய்யப்பட்டானேயாகில், அவ்வியந்திரம் தலையை வெட்டின அச்சமயத்தில் அவன் படும் பாடுகளும், வேதனையும் கத்தி விழுவதற்கு முன் எவ்வளவு வாதனையிலிருந்திருக்கக்கூடுமோ அதற்கு மேல் பதின்மடங்கு கோரமாயிருக்குமென்கிறார். ஏதாவதொரு விபத்தில் அகப்பட்டு ஒருமனிதன் திடீரென்று மரணமடைந்தானாகில் அவனுடைய பற்பல பாகங்களெல்லாம் கொஞ்ச நேரம் மேலும் உயிர் நிலைத்துத் துடி துடித்துக் கொண்டிருக்கும். எலும்புகள் 18 மணி நேரம் வரைக்கும், வயிற்றினுள்ளிருப்பவைகளெல்லாம் 6 முதல் 8 மணி வரைக்கும் உயிருடனிருக்கின்றன. சரியான காலத்தில் ஒரு மனித தேகத்திலிருந்து ஏதாவதொரு பாகத்தைத் துண்டித்து மற்றொரு மனிதனுடைய உடம்பில் சேர்த்தாலும் அவை தனக்குரியவேலையைச் சரிவரச் செய்ய முடியும் என்கிறார்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தொலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)